# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.09.28 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கைக் கிரிக்கெட்

இலங்கைக் கிரிக்கெட்டின் கட்டுப்பாட்டுக்காக, ஆளுகைக்காக, ஒழுங்குப்படுத்தலுக்காக, ஊக்குவிப்புக்காக, விருத்திக்காக மற்றும் நிருவாகத்துக்காக இலங்கைக் கிரிக்கெட்டினைத் தாபிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; நல்லாட்சி, நேர்மைத்தன்மை, வெளிப்படைத்தன்மை, வகைக் கூறவேண்டியமை, உள்ளடக்குந்தன்மை மற்றும் சமமான வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற கோட்பாடுகளினூடாக கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும்; எல்லாப் பங்கேற்பாளர்களினதும் நல்வாழ்வினைக் காப்பதற்கும் ஊழல் மற்றும் வேறு முறையற்ற நடத்தையிலிருந்து கிரிக்கெட்டினை பேணிக்காப்பதற்கும்; இலங்கைக் கிரிக்கெட்டின் அமைத்துருவாக்கம், தத்துவங்கள் மற்றும் பணிகளுக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 290.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

# இலங்கைக் கிரிக்கெட்

ச.வ.ஓ.- 29/2026

**இலங்கைக்கிரிக்கெட்டின்கட்டுப்பாட்டுக்காக, ஆளுகைக்காக, ஒழுங்குப்படுத்தலுக்காக, ஊக்குவிப்புக்காக, விருத்திக்காக மற்றும் நிருவாகத்துக்காக இலங்கைக் கிரிக்கெட்டினைத் தாபிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; நல்லாட்சி, நேர்மைத்தன்மை, வெளிப்படைத்தன்மை, வகைக் கூறவேண்டியமை, உள்ளடக்குந்தன்மை மற்றும் சமமான வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற கோட்பாடுகளினூடாக கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும்; எல்லாப் பங்கேற்பாளர்களினதும் நல்வாழ்வினைக் காப்பதற்கும் ஊழல் மற்றும் வேறு முறையற்ற நடத்தையிலிருந்து கிரிக்கெட்டினை பேணிக்காப்பதற்கும்; இலங்கைக் கிரிக்கெட்டின் அமைத்துருவாக்கம், தத்துவங்கள் மற்றும் பணிகளுக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம் 2026 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, இலங்கைக் கிரிக்கெட் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## இலங்கைக் கிரிக்கெட்டைத் தாபித்தல்

இலங்கைக் கிரிக்கெட்டைத் தாபித்தல்

**2.** (1) இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக் கப்பட்டுள்ள உறுப்பாண்மை வகுதிகளின்கீழ் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பதிவுசெய்யப்படக் கூடியவாறான உறுப்பினர்களின் அத்தகைய உறுப்பினரைக் கொண்ட இலங்கைக் கிரிக்கெட் எனவழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டிய குழுவொன்றைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன் இலங்கைக் கிரிக்கெட் விளையாட்டின் ஒழுங்குப்படுத்தல், ஊக்குவிப்பு, பாதுகாத்தல் மற்றும் விருத்திக்கு பொறுப்பாகவுள்ள தனி அதிகாரசபையாக விருத்தலும் வேண்டும்.

PL 15951- 470 (2026/09)

(2) இலங்கைக் கிரிகெட்டானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**3.** இலங்கைக் கிரிக்கெட்டின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றுக்காகவிருத்தல் வேண்டும் – இலங்கைக் கிரிக்கெட்டின் குறிக்கோள்கள்

(அ) உறுப்பாண்மைக் கடப்பாடுகளுக்கு, ஆளுகைத் தேவைப்பாடுகளின், மற்றும் (இதனகத்துப் பின்னர் “ஐசீசீ” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்தேசக் கிரிக்கெட் பேரவையின் (இதனகத்துப்பின்னர் “ஏசீசீ” எனக்குறிப்பீடு செய்யப்படும்) ஆசிய கிரிக்கெட் பேரவையின், இலங்கை கிரிக்கெட் உறுப்பினராக அல்லது வேறு கழகங்கள் அல்லது அதன் இணையாளராகவிருக்கின்ற அல்லது வேறு ஏதேனும் கழகத்தின் முடிபுகளுக்கும், அவை இலங்கைக் கிரிகெட்டுக்கு ஏற்புடையனவாகின்ற வரையிலும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வரையிலும் கிரிக்கெட் சட்டத்துக்கும் பயன் கொடுத்தல் மற்றும் பின்பற்றியொழுகுதல்;

(ஆ) சர்வதேச மட்டம், தேசிய மட்டம், மாகாண மட்டம், மாவட்ட மட்டம், பாடசாலை மட்டம் என்பவற்றை உள்ளடக்கிய எல்லா மட்டங்களிலும் விளையாடப்படும் மற்றும் விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஆட்களின், நிறுவனங்களின் அல்லது சபைகளின் வேறுபட்ட வகுதிகள் மூலம் விளையாடப்படும் இலங்கைக் கிரிகெட் விளையாட்டினைக் கட்டுப்படுத்தல், ஆளுதல், ஒழுங்குபடுத்தல், ஊக்குவித்தல். விருத்திசெய்தல் மற்றும் நிருவகித்தல்;

(இ) விளையாட்டு வீரர்கள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள், கழகங்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புபட்ட வேறு எல்லா அக்கறைக்கொண்டுள்ளோர்களினால் கிரிக்கெட்

விளையாட்டில் பங்குபற்றுதலை மேம்படுத்துதல், ஊக்கப்படுத்துதல் மற்றும் வசதியளித்தல்;

(ஈ) இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டின் நிருவாகம் மற்றும் நடாத்துகையுடன் தொடர்புடைய விளையாட்டு நிபந்தனைகள், கொள்கைகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் ஆளுகை நியமங்களுடன் தொடர்புடைய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தல், வலுவுறுத்தல், இணங்கி யொழுகுதல் மற்றும் பயன்கொடுத்தல்;

(உ) இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினர்களின் ஆளுகையின் ஒரு சீர்நியமங்களை தாபித்தல்;

(ஊ) ஊக்குப்பதார்த்தப் பயன்பாடு, ஊழல், ஓரங் கட்டுதல், தொல்லை, வயது மோசடி மற்றும் நன்னெறியுடன் ஒவ்வாத அல்லது நியாயமற்ற வேறு எல்லா செயல்முறைகளையும் தடை செய்தல் உட்பட, கிரிக்கெட் விளையாட்டினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட எல்லா அக்கறை கொண்டவர்களினதும் அக்கறைகள், சேமநலன், நேர்மைத்தன்மை, உயர்தொழில்த் தன்மை மற்றும் நன்னெறி நியமங்களைப் பாதுகாத்தல், ஊக்கப்படுத்துதல் மற்றும் உயர்த்துதல்; அத்துடன்

(எ) கிரிக்கெட் விளையாட்டின் அபிவிருத்தி மற்றும் அணுக்கம் மற்றும் இலங்கை முழு வதிலுமுள்ள சமுகங்களின் சேமநலன் மற்றும் விருத்தி என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்வதற்கு கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு, தருமஞ்சார், கல்விசார், கலாசார, சூழல்சார், சமத்துவ, பன்முக மற்றும் கூட்டிணைந்த சமூக சேமநலன் ஆரம்பிப்புக்களைப் பொறுப்பேற்று ஊக்கப்படுத்துதலும்.

இலங்கைக் கிரிக்கெட்டின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**4.** இலங்கைக் கிரிக்கெட்டின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் –

(அ) ஒவ்வொரு ஆண்டினதும் முதல் ஆறு மாதங்களினுள் வருடாந்த பொதுக் கூட்டங்களை நடாத்துதல்;

(ஆ) தேவைப்படுகின்றவாறாகவும் தேவைப்படும் போதும் விசேட பொதுக் கூட்டத்தை நடாத்துதல்;

(இ) ஐசீசி, ஏசீசி மற்றும் இலங்கை கிரிக்கெட்டில் உறுப்பினராக அல்லது இணையாகவுள்ள அல்லது வருகின்ற வேறு எவையேனும் கழகங்களுடன் அதன் இணைப்பினைப் பெறுதல், பேணுதல், புதுப்பித்தல் அல்லது வேறுவகையில் அதன் இணைப்பினை வைத்திருத்தல்;

(ஈ) கிரிக்கெட் விளையாட்டின் தன்னாட்சி ஆளுகை, நேர்மைத்தன்மை, நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்தலுடன் தொடர்புடையதாக ஐசீசீ அல்லது ஏசீசீ உடனான அதன் அந்தஸ்து, உரிமைகள், கடப்பாடுகள் அல்லது தொடர்ச்சியான இணைப்புக்கு பங்கமேற்படக்கூடிய, தீங்குவிளைவிக்கக்கூடிய, பாதிக்கக்கூடிய, அல்லது எதிரிடையாக பாதிக்கின்ற ஏதேனும் செயல், செய்யாமை, செயன்முறை அல்லது நடத்தையில் ஈடுபடுவதிருந்து தவிர்த்தல்;

(உ) இலங்கையினுள் எல்லா ஏற்றங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளின் வடிவங்களின் உள்நாட்டு மற்றும் சர்வதேச கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள், லீக் சுற்றுப்போட்டிகள், போட்டிகள், பந்தயங்கள், சுற்றுகள் மற்றும் தொடர்புபட்ட நிகழ்வுகள் என்பவற்றை ஒழுங்கமைத்தல், வலுவளித்தல், நடாத்துதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைசெய்தல்;

(ஊ) பயிற்றுவித்தல், நடுவராகப் பணியாற்றுதல், போட்டியை அதிகாரபூர்வமாக நடாத்துதல், கற்பித்தல், பயிற்சியளித்தல் மற்றும் பரீட்சைகளை அறிமுகஞ்செய்தல், தரப்படுத்தல் முறை

மைகள், உயர்செயற்றிறன் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேறு தொழினுட்ப மற்றும் அபிவிருத்தி முன்முயற்சிகளினூடாக இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டின் தரத்தினையும் நியமங்களையும் விருத்தி செய்தலும் மேம்படுத்தலும்;

(எ) ஐசீசி, ஏசீசி உடனும் இலங்கைக் கிரிக்கெட்டின் அக்கறைகளுக்கு அவசியமானதாக அல்லது பயனுள்ளதாக கருதக்கூடியவாறான அத்தகைய வேறு சர்வதேச கிரிக்கெட் அல்லது விளையாட்டுக் குழுக்களுடனுமான உறுப்பாண்மை மற்றும் இணைப்பு உட்பட, இலங்கைக் கிரிக்கெட்டினை சர்வதேச ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்தல்;

(ஏ) விளையாட்டுக்களின் உட்கட்டமைப்புக்கள், கல்விக்கூடங்கள், உயர்செயற்றிறன் நிலையங்கள், விளையாட்டு சுற்றுலாப் பயண முன்முயற்சிகள், ஒருங்கிணைக்கப்பட்ட விளையாட்டுக்களை விருத்திசெய்தல் கருத்திட்டங்கள் மற்றும் விளையாட்டு நகர எண்ணக்கருக்கள் உட்பட, கிரிக்கெட் விளையாட்டினதும் விளையாட்டுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளின் நிலைப்பெறுதகு விருத்தி, வர்த்தக உயர்வு மற்றும் விரிவுபடுத்தலுக்கான கருத்திட்டங்களையும், முயற்சிகளையும் முன்முயற்சிகளையும் பொறுப்பேற்றல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல்;

(ஐ) இலங்கை மக்களின் சார்பில் கிரிக்கெட் விளையாட்டின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் கட்டுக்காப்பாளராகவும் அதிகாரத்தையும் பொறுப்பினையும் வைத்திருத்தல்;

(ஒ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர்களின் வகுதிகளை பதிவுசெய்தல் மற்றும் 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இலங்கை கிரிக்கெட்டின் எவரேனும் உறுப்பினரின் உறுப்பாண்மையை இடைநிறுத்தல், அகற்றுதல் அல்லது வேறு வகையில் முடிவுறுத்தல்;

(ஓ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை அல்லது உருவச்சொத்துக்கள் அல்லது அருவச்சொத்துக்கள் கொள்வனவு செய்தல், வைத்திருத்தல் மற்றும் முகாமை செய்தல் அல்லது இலங்கைக் கிரிக்கெட்டினால் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை அல்லது உருவச்சொத்துக்களை அல்லது அருவச்சொத்துக்களை குத்தகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல், அடமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் அத்துடன் இலங்கைக் கிரிக்கெட்டின் நோக்கத்துக்காக சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதன்பின்னர் அத்தகைய உரிமை களையும் சிறப்புரிமைகளையும் அளித்தல்;

(ஔ) பணமாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகை யிலாயினுஞ்சரி மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து நம்பிக்கைப் பொறுப்பை பொறுப்பேற்றலும், அத்துடன் இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறை வேற்றுவதில் அவற்றைப் பயன்படுத்தலும் அத்துடன் தரும நோக்கங்களுக்காக் கொடை களைச் செய்தலும்;

(க) இலங்கை கிரிக்கெட்டின் நோக்கங்களுக்காக சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்னைகளின் மீது பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதலும் அத்தகைய பணம் கொடுத்துத் தீர்க்கப்படுவதை உறுதிப்படுத்துதலும்;

(ங) இலங்கைக் கிரிக்கெட் உறுப்பினர்களின் வேறுபட்ட வகுதிகளிடமிருந்தான உறுப் பாண்மைக் கட்டணம், வருடாந்த ஒப்பப் பணங்கள், மற்றும் விதிகளினால் குறித் துரைக்கப்படக்கூடியவாறான இலங்கை கிரிக் கெட்டினால் நடாத்தப்பட்ட அல்லது ஒழுங்கு செய்யப்பட்ட போட்டிகள், சுற்றுப்போட்டிகள்,

நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள், என்பன தொடர்பில் இலங்கை கிரிக்கெட்டினால் வழங்கப்படும் பிரவேசச் சீட்டுகள், வசதிகள் அல்லது சேவைகளை விதித்தல்;

(ச) சபையானது தகுதியானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புக்களில், இலங்கைக் கிரிக்கெட்டின் நிதியங்களை முதலீடுசெய்தல்;

(ஞ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நாணயத்தில் 5 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட சபையினால் தீர்மானிக்கப்பட்ட, ஏதேனும் வங்கியில் அல்லது நிதிசார் நிறுவனத்தில் நிலையான, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்;

(ட) இலங்கையின் அல்லது வெளிநாட்டின் அத்தகைய எல்லா உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் அல்லது முதலீடுகள், கூட்டு முயற்சிகள், செயல்நுணுக்க ஒப்பந்தங்கள், சலுகைகள், பகிரங்க தனியார் பங்காண்மைகள், அமைத்தல் தொழிற்படுத்தல் கைமாற்றல் ஒழுங்கேற்பாடுகள் மற்றும் ஏனைய வர்த்தக, விருத்திசார் அல்லது தொழிற்பாடுசார் ஒழுங்கேற்பாடுகளை நேரடியாகவாயினுஞ்சரி, அல்லது சபையினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவாயினுஞ்சரி, செய்தல் புரிதல் அல்லது கொண்டு நடாத்துதல் ;

(ண) கிரிக்கெட் விளையாட்டின் அல்லது கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளின் அபிவிருத்தி ஊக்குவிப்பு நிருவாகம், ஒழுங்கமைத்தல் அல்லது நடாத்துதல் என்பவற்றுக்கு அவசியமானவாறான ஏதேனும் அங்கீகாரம், அனுமதி, சம்மதம், ஒதுக்கீடு, வசதி, அணுக்கம் அல்லது விலக்களிப்பு உள்ளடங்கலாக, எவையேனும் உரிமைகள், முன்னுரிமைகள் மற்றும் சலுகைகளை ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது அரசாங்கம் அல்லது மாகாணசபை, உள்ளூரதிகாரசபை அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் நிறுவனம் அல்லது ஏதேனும் அமைச்சு அல்லது திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்;

(த) ஏதேனும் புலமைசார் சொத்துரிமைகளை விருத்தி செய்தல், விண்ணப்பித்தல், கொள்வனவு செய்தல் அல்லது வேறுவகையில் கொள்ளுதல் மற்றும் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மேல் அத்தகைய புலமைசார் சொத்துடன் தொடர் புடைய உரிமங்களைப் பயன்படுத்தல், சுரண்டுதல், பிரயோகித்தல், விருத்திசெய்தல் அல்லது அளித்தல்;

(ந) இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டினை விளையாடுவதற்கு பயன்படுத்தப்படும் எந்த வொரு வகையானதுமான மைதானத்தின் தரைப்பகுதியின் நவீன புற்தரை முகாமைத் துவத்தின் ஏற்றங்கீகரித்தலை ஊக்கப்படுத்தலும் ஊக்குவித்தலும்;

(ப) பாகம் VI இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இலங்கை கிரிக்கெட்டின் பணியாட்டொகுதிக்கு அலுவலர்களையும் ஊழியர்களையும் ஆலோசகர் களையும் மதியுரைநர்களையும் மற்றும் வேறு ஆளணியினரையும் தொழிலுக்கமர்த்துதல்;

(ம) இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினர்கள், எவரேனும் விளையாட்டு வீரர், போட்டி நடுவர் அல்லது வேறெவரேனும் ஆளுடனான தோதான ஒப்பந்தஞ்சார் ஒழுங்கேற்பாடுகளினூடாக நிதி சார் வலுவளிப்புகளை விதித்தல்;

(ய) இலங்கைக் கிரிக்கெட் விளையாட்டின் நிலைபெறுதகு வளர்ச்சியையும் உயர்ச்சியையும் உறுதிப்படுத்தும் நோக்கொன்றுடன் எல்லா இலங்கைக் கிரிக்கெட் உறுப்பினர்களுக்கும் கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய வேறு அக்கறைகொண்டவர்களுக்கும் வசதி களையும் உள்கட்டமைப்பையும் ஆதரவையும் வழங்குதல்;

(ர) பிரிவு 21 இன் கீழான குழுக்கள் மற்றும் உப குழுக்களின் அத்தகைய எண்ணிக்கையோரை நியமித்தல்;

(ல) சபை தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய காலப்பகுதிக்காக, இலங்கை கிரிக்கெட்டின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை தவிர்ந்த, ஏதேனும் மாகாண கிரிக்கெட் கழகத்தின் நிருவாகப் பணிகளில் எல்லாவற்றையும் அல்லது ஏதேனுமொன்றை அமைச்சரின் அங்கீகாரத்துடன் தற்காலிகமாக மேற்கொள்ளுதல் மற்றும் பிரயோகித்தல்; அத்துடன்

(வ) பொதுவாக இலங்கைக் கிரிக்கெட்டின் குறிக்கோள்களை எய்துவதற்கு, உகந்தன வாகவுள்ள அல்லது இடைநேர் விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

(2) இலங்கைக் கிரிக்கெட்டின் மீது வழங்கப்பட்டுள்ள, குறித்தளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நல்லெண்ணத் திடனும் கிரிக்கெட் விளையாட்டின் நலன்களைக் கருத்திற்கொண்டும் நேர்மைத்தன்மை, வகைக்கூறும்தன்மை, வெளிப்படைத்தன்மை, உள்ளடக்கும் தன்மை மற்றும் பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பு ஆகிய கோட்பாடுகளுக்கிணங்க, அதன் பங்குபற்றுநர்கள் மற்றும் இலங்கைப் பிரசைகள் என்போர் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

## பாகம் II

## இலங்கைக் கிரிக்கெட்டின் நிருவாகம், ஆளுகை மற்றும் கட்டுப்பாடு

**5.** (1) இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவல்களின் நிருவாகம், ஆளுகை மற்றும் கட்டுப்பாடு என்பன (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபையை அமைத்துருவாக்குதல்

(2) சபையானது இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின் கீழ் இலங்கைக் கிரிக்கெட்டுக்கு அளிக்கப்பட்டுள்ள, குறித்தளிக்கப்பட்டுள்ள

அல்லது அதன்மீது விதிக்கப்பட்டுள்ள தத்துங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும் புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சபையானது –

(அ) 22 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பெயர் குறித்து நியமிக்கும் குழுவினால் (4) ஆம் உட்பிரிவுக்கமைய பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய மற்றும் சபையினால் நியமிக்கப்பட்ட பின்வரும் சுயாதீனப் பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருக்க வேண்டிய பட்டயக் கணக்காளரொருவர் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதி அத்தகைய நிறிவகத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு குறையாததாகும்;

(ii) குறைந்தபட்சம் பதினைந்து ஆண்டுகளுக்கு இலங்கையில் முனைப்பான சட்டத் தொழிலில் ஈடுபடுகின்ற சட்டத்தரணி யொருவர்;

(iii) நியமனத் தேதிக்கு உடன்நேர் முற்போந்த முப்பத்தாறு மாதங்கள் என்னும் காலப்பகுதிக்கு முன்னரான ஏதேனும் நேரத்தில் பதினைந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்குக் குறையாமல் விளையாடியவர்களான நற்சான்றி தழுடைய முன்னாள் கிரிக்கெட் வீரர்:

(iv) நீடித்த கூட்டிணைப்பு அனுபவத்துடன் கணினி விஞ்ஞானத்தில் அல்லது தகவல் முறைமையில் பட்டப்பின் தகைமை யொன்றைக் கொண்டிருக்கின்ற தகவல் தொழினுட்ப உயர்தொழிலரொருவர்;

(v) குறிப்பாக தேசிய அல்லது சர்வதேச சந்தை முன்னிலைப்படுத்தலுடனான

வர்த்தக நாமங்களை விருத்தி செய்தல், முகாமைசெய்தல், வர்த்தகமயமாக்கல் மற்றும் ஊக்குவித்தல் அனுபவம் உள்ளடங்கலாக, சந்தைப்படுத்தல் அல்லது பூகோள வர்த்தக நாம முகாமைத்துவத்தில் அல்லது தொடர்புடைய துறைகள் என்பவற்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்றை கொண்டுள்ளவரும் சந்தைப்படுத்தல் என்னும் துறையில் நிரூபிக்கக்கூடிய சாதனப் பதிவைக் கொண்டுள்ளவருமான ஆளொருவர்; அத்துடன்

(vi) ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தில் அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பில் பிரதான நிறைவேற்று அலுவலராக, பொது முகாமையாளராக அல்லது ஒத்த பதவியில் உள்ளவரான சிரேட்ட நிறைவேற்று அல்லது தலைமைத்துவ பதவிகளில் சேவையாற்றியுள்ள அல்லது சேவையாற்றுகின்ற ஆட்களை உள்ளடக்கிய, கணக்கீடு, நிதி, முகாமைத்துவம், சட்டம், தகவல் தொழினுட்பம், சந்தைப்படுத்தல், விளையாட்டுக்கள், அல்லது ஆளுகை ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட நேர்மையையும், களங்கமற்ற நன்மதிப்பினையும் அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்டிருக்கின்ற வேறு இரண்டு ஆட்கள்; அத்துடன்

(ஆ) இலங்கைக் கிரிக்கெட் பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடைய இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களை.

(4) மூன்றாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறைந்தபட்சம் இரண்டு சுயாதீன பணிப்பாளர்கள் பெண்களாகவிருத்தல் வேண்டும்.

(5) முதலாவது சபையானது 9 ஆம் பிரிவில் குறித்துரைக் கப்பட்டுள்ள முறையிலும் காலப்பகுதியினுள்ளும் நியமிக்கப் படுதல் வேண்டும்.

சபையின் தவிசாளரும் உப தவிசாளரும்

**6.** (1) சபையின் தவிசாளர் சுயாதீன பணிப்பாளர் களுக்கிடையிலிருந்து சபையின் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குமூலம் தெரிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் சபையின் உபதவிசாளர் சபையின் தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர்களுக்கிடையிலிருந்து சபையின் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குமூலம் தெரிவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் சுகவீனம் காரணமாக, வேறு உடற்றகு தியீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தமது பதவிக்கான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு, நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து, உப தவிசாளர் தமது உப தவிசாளராக வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக, தவிசாளராக செயலாற்றுதல் வேண்டும். தவிசாளர் மற்றும் உப தவிசாளர் சுகவீனம், காரணமாக, வேறு உடற்றகுதியீனம் இலங்கையில் அல்லாமை அல்லது வேறு காரணமாக தமது பதவியில் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, சபை சுயாதீன பணிப்பாளராக தமது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக, தவிசாளராக செயலாற்றுவதற்கு எவரேனும் சுயாதீன பணிப்பாளராக நியமிக்கலாம்.

(3) தவிசாளர் அல்லது தவிசாளரின் இல்லாமையில், சபையின் உப தவிசாளர் ஐசீசி, ஏசீசி அல்லது ஏதேனும் இணைக்கப்பட்ட மன்றத்தின் ஏதேனும் கூட்டத்தில் சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும், அத்துடன் அவர்களின் இல்லாமையில், அவர் சார்பில் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் சுயாதீனப் பணிப்பாளர் ஏதேனும் அத்தகைய கூட்டத்தில் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.

சபையின் சுயாதீன பணிப்பாள ரொருவராக அல்லது தெரிவு செய்யப் பட்ட பணிப்பாள ரொருவராக நியமிக்கப் படுவதற்கு அல்லது தெரிவு செய்யப்படு வதற்கான தகைமை யீனங்கள்.

**7.** ஆளாருவர், அத்தகைய ஆள்-

(அ) பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக, ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொரு வராகவிருப்பின் அல்லது உறுப்பினராகவரின்;

(ஆ) இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவலரொருவராக அல்லது ஊழியரொருவராக, 22 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பெயர்குறித்து நியமிக்கும் குழுவின் உறுப்பினரொருவராக அல்லது இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினரின் எவரேனும் பதவிதாங்குநராகவிருப்பின் அல்லது வரின்;

(இ) சித்தசுவாதீனமற்றவராக அல்லது அவரின் கடமைகளை நிறைவேற்று வதற்கு இயலாத வராகவிருப்பதாக தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றினால் தீர்ப்பளிக்கப்படின் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) கடனிறுக்க வகையற்றவரொருவராக தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப் படின் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(உ) இலங்கையின் எழுத்திலான சட்டங்களின் கீழான குற்றத்தண்டனையிலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டின் முடிவுறாதிருப்பவை எது எவ்வாறிருப்பினும், பெயர்குறித்து நியமித்தலின், நியமனத்தின் அல்லது தெரிவுத் தேதிக்கு நேர்முற்போந்த பத்து ஆண்டுகள் என்னும் காலப்பகுதியினுள், தண்டனையானது இடைநிறுத்தப்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினால் அல்லது இராணுவ நியாயசபையினால் ஆறு மாதங்களுக்குக் குறையாத மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு ஒழுக்கக்கேட்டை, மோசடியை, நேர்மையீனத்தை, ஊழலை, அல்லது வன்முறையை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு குற்றத்தீர்ப்பளித்திருப்பின் அல்லது தண்டனையளித்திருப்பின் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அல்லது தண்டனையளிக்கப்பட்டிருப்பின்;

(ஊ) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று ஏதுக்கள், பிறழ் நடத்தை, அல்லது கடமை மீறல், அல்லது வேறு ஏதேனும் தகமையீனம் என்பவற்றின் மீது இலங்கை கிரிக்கெட்டில் அல்லது இலங்கை கிரிக்கெட்டின் எவரேனும் உறுப்பினர்களின் வகுதி என்பவற்றில் ஏதேனும் பதவியிலிருந்து முன்னர் அகற்றப்பட்டிருந்திருப்பின் அல்லது வறிதாக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டிருந் திருப்பின்;

(எ) பெயர்குறித்து நியமித்தல்களின் சமர்ப்பிப்பிற்கு உடன் முன்னரான மூன்று ஆண்டு காலப்பகுதியின் போது, இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகத்தில் ஒன்றில் ஊதியம் பெறும் ஊழியரொருவராக அல்லது சுயாதீனமான ஊடகவியலாளரொருவராக ஏதேனும் ஊடக ஒழுங்கமைப்புக்கு இணைக்கப்பட்ட அல்லது ஊடக ஒழுங்கமைப்பொன்றின் சொந்தக்காரரொருவராக அல்லது பயனுகர் சொந்தக்காரராக அல்லது கூட்டுசொந்தக்காரராக அல்லது பெரும்பான்மை பங்குதாரரொருவராகவிருக்கும் உயர்தொழில்சார் ஊடகவியலாளராக செயற்படுகின்றாராயின் அல்லது செயற்பட்டிருப்பின்;

(ஏ) ஏதேனும் தேசிய குழாம் அல்லது ஏதேனும் தேசிய அணியின் கிரிக்கெட் விளையாட்டு வீரரின் பெற்றோர் ஒருவராக அல்லது சகோதரரொருவராகவிருப்பின்;

(ஐ) பெயர் குறித்துநியமித்தலின் சமர்ப்பித்தலுக்கு உடன் முன்னரான மூன்று ஆண்டின்போது போட்டி கண்காணிப்பாளரொருவராக அல்லது இலங்கைக் கிரிக்கெட்டினால் நடாத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் தனிப்பட்ட விளையாட்டு வீரரொருவரின் அல்லது அணியொன்றின் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருப்பின்;

(ஒ) கிரிக்கெட் விளையாட்டு வீரரொருவரின் முகவரொருவராக அல்லது முகாமையாளராக விருப்பின்;

(ஓ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழிக்கப்பட்டிருப்பின்;

(ஔ) பெயர்குறித்து நியமித்தலின் சமர்ப்பித்தலுக்கு உடன் முன்னரான மூன்று ஆண்டு காலப்பகுதியின் போது விளையாட்டுப் பண்டங்கள், விளையாட்டுக் கருவி அல்லது கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய ஏதேனும் பொருள் அல்லது உபகரணத்தை இலங்கைக்கு விற்பனை செய்தலில் அல்லது வழங்குவதில் ஈடுபடின் அல்லது ஈடுபட்டிருப்பின் அல்லது விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலை களை நடாத்தியிருப்பின் அல்லது நடாத்தப் பட்டிருப்பின் அல்லது கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய நிதிசார் ஈடுபடின் அல்லது வழங்குவதில் சேவைகளை ஈடுட்டிருப்பின்;

(க) அவரது நெருங்கிய உறவினர்களில் எவரேனும் உறுப்பினர் (வாழ்க்கைத் துணையொருவர், பெற்றோரொருவர், சகோதரரொருவர், மகனொருவர், மகள் அல்லது மருமகன் அல்லது மருமகளாகவிருத்தல்)பந்தயம்,சூதாட்டம்அல்லது பணயம் போன்றவற்றில் அக்கறையொன்றைக் கொண்டிருப்பின், அல்லது பந்தயம், சூதாட்டம் அல்லது பணய ஒழுங்கமைப்பொன்றிலிருப்பின் அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்க மைப்பின் அன்றாட செயற்பாடுகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருப்பின்;

(ங) கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய செயற்பாடொன்றுக்காக அமைச்சரின் அங்கீகாரம் அல்லது ஒருப்பாட்டுடன் சர்வதேச விளையாட்டு நிகழ்வொன்றில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கைக்கு திரும்பிவராதிருந்த ஆளொருவராகவிருப்பின் அல்லது ஆளொருவராகவிருந்திருப்பின்;

(ச) உறுப்பு கழகத்தின் அல்லது இலங்கை கிரிக்கெட் கழகத்தின் அல்லது சங்கத்தின் அல்லது விளையாட்டுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின் தலைவர், உப தலைவர், செயலாளர், உதவிச் செயலாளர்,

பொருளாளர், அல்லது உதவிப் பொருளாளர் என்னும் பதவியை ஒரேநேரத்தில் வகிக்கின்ற ஆளொருவராகவிருப்பின்; அல்லது

(ஞ) தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களைப் பயன் படுத்தல், ஊழல், பந்தயம், போட்டி நிர்ணயம், கள நிர்ணயம் அல்லது உள்ளக தகவல்களின் பிறழ்பயன்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய ஏதேனும் தவறு தொடர்பில் அத்தகைய தண்டம், தடை விதிப்பு, இடைநிறுத்தம், தடை அல்லது தகைமையீனம் என்பவற்றுக்கு உட்பட்டிருக்குமிடத்து, பின்வருவோரால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டம், தடை விதிப்பு, இடைநிறுத்தம், தடை அல்லது தகைமையீனத்துக்கு ஆளாகியிருந்திருப்பின் –

(i) இருபத்தியொராம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைக் கிரிக்கெட்டின் ஒழுக்காற்று மற்றும் பிணக்குகள் குழு;

(ii) 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஊக்கு பதார்த்தத் துக்கு எதிரான முகவராண்மை;

(iii) உலக ஊக்குபதார்த்தத்துக்கு எதிரான முகவராண்மை; அல்லது

(iv) ஐசீசீ, ஏசீசீ அல்லது இலங்கைக் கிரிக்கெட் இணைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் விளை யாட்டுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட ஏதேனும் கழகங்களின் முடிபெடுக்கும் அதிகாரசபை,

சபையின் சுயாதீன பணிப்பாளரொருவராக அல்லது தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளராக நியமிக்கப்படுவதிலிருந்து, தெரிவு செய்யப்படுவதிலிருந்து அல்லது தொடருவதிலிருந்து தகைமையற்றவராகவிருத்தல் வேண்டும்.

சபையின் சுயாதீன பணிப்பாளர் களினதும் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் களினதும் நியமனம்

**8.** (1) இருபத்திரெண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள பெயர்குறித்து நியமிக்கும் குழுவானது சபையை அமைத்துருவாக்கும் நோக்கத்துக்காக, சபையின் சுயாதீன பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுவதற்கு தகுதியான ஆட்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்.

(2) சுயாதீன பணிப்பாளரொருவர் நியமிக்கப்படுவதற்கு 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் தகுதியுடைய எவரேனுமாள் விண்ணப்பம் கோரப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் (1) ஆம் உட் பிரிவின் கீழ் விண்ணப்பம் செய்யலாம்.

(3) எவரேனும் சுயாதீன பணிப்பாளர் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, பெயர்குறித்து நியமிக்கும் குழுவானது அத்தகைய ஏதேனும் பதவி வறிதாக வருகின்ற முப்பது நாட்களினுள் அதன் பெயர்குறித்து நியமித்தலை செய்தல் வேண்டும்.

(4) பெயர்குறித்து நியமிக்கும் குழுவானது, விதிகளின் மூலம் சபைக்கு குறித்துரைக்கக்கூடியவாறான முறையில் சுயாதீன பணிப்பாளர்களாக நியமிப்பதற்கு பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டி ஆட்களைக் கருத்திற்கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டுமென்பதுடன் பெயர்குறித்து நியமிக்கும் குழுவின் முதலாவது கூட்டத்தேதியிலிருந்து பத்து நாட்களினுள் இலங்கைக் கிரிக்கெட் வலைத்தளத்தில் அத்தகைய நடவடிக்கைமுறைகளை வெளியிடுதலும் வேண்டும்.

(5) பெயர்குறித்து நியமிக்கும் குழுவானது, 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி மற்றும் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, சுயாதீன பணிப்பாளரொருவராக நியமிப்பதற்கு தகுதியானவரெனவும் சரியானவரெனவும் அது கருதுகின்ற எவரேனுமாளை அடையாளங்காண்பதற்கும் பெயர்குறித்து நியமிக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஆளொருவர் –

(i) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர், (இதனகத்துப்பின்னர் “முன்னுரித்தாளர் சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய

தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டிருப்பின் அல்லது தெரிவுசெய்யப்பட்டிருந்திருப்பின்;

(ii) இலங்கை கிரிக்கெட்டின் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டிருப்பின் அல்லது பட்டிருந் திருப்பின்; அல்லது

(iii) இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பின ரொருவரின் பதவிதாங்குநரொருவராக விருந்திருப்பின் அல்லது இருந்திருப்பின்,

சபையின் சுயாதீன பணிப்பாளரொருவராக நியமிக்கப் படுதலாகாது.

(7) சுயாதீன பணிப்பாளரொருவரின் தெரிவானது மற்றும் பெயர்குறித்த நியமனமானது கூட்ட நடப்பெண்ணொன்று சமூகமளித்திருக்காத பெயர்குறித்து நியமிக்கும் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் செய்யப்படுதலாகாது.

(8) பெயர்குறித்து நியமிக்கும் குழுவினால் தேர்ந் தெடுக்கப்பட்டு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்கள் சபைக்கு பெயர்குறித்த நியமனங்களை சமர்ப்பித்தலின் மேல் சபையின் சுயாதீன பணிப்பாளர்களாக சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(9) தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர்கள் பெயர்குறித்து நியமித்தல்களின் கோரலினால் இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர்கள் இலங்கைக் கிரிக்கெட்டின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடைய அத்தகைய உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். பெயர்குறித்த நியமனங்களுக்கான அத்தகைய கோரல் மற்றும் தெரிவுகளுக்கான நடத்தை இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கியிருத்தல் வேண்டும்.

முதலாவது சபையை நியமித்தல்

**9.** (1) பெயர்குறித்த நியமனக் குழுவானது இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட நாற்பத்தைந்து நாட்கள் என்னும் காலப்பகுதியினுள் முதலாவது சபையின் சுயாதீன பணிப்பாளர்களாக நியமனத்துக்காக பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு ஆட்களைக் கருத்திற்கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்.

(2) பெயர்குறித்த நியமனக்குழு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட நூற்றியெண்பது நாட்கள் என்னும் காலப்பகுதியினுள் முதலாவது சபையின் சுயாதீனப் பணிப்பாளர்களாக நியமிக்கப்படுவதற்கு ஆட்களை தெரிவுசெய்தலும் பெயர் குறித்து நியமித்தலும் வேண்டும்.

(3) (இதனகத்துப்பின்னர் “நடப்பு பதவியிலுள்ள சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை கிரிக்கெட் மாற்றுக்குழு முதலாவது சபையின் சுயாதீனப் பணிப்பாளர்களாக பெயர்குறித்த நியமனக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆட்களை நியமித்தல் வேண்டும்.

(4) நடப்பு பதவியிலுள்ள சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட நூற்றியெண்பது நாட்களுக்கு குறையாத காலப்பகுதியினுள், இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து முதலாவது சபையின் தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர்களின் தெரிவை வசதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய தெரிவு மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடாத்தப்படவேண்டிய இலங்கை கிரிக்கெட்டின் முதலாவது பொதுக் கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குமூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(5) முதலாவது சபையின் பதவிக்காலம் சுயாதீன பணிப்பாளர்களின் நியமனப் பூர்த்தியின்மேல் மற்றும் இப் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளரின் தெரிவின் மேல் தொடங்குதல் வேண்டும்.

சுயாதீன பணிப்பாளர்களின் பதவிக் காலம்

**10.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் சுயாதீன பணிப்பாளர் ஒவ்வொருவரும், அத்தகைய சுயாதீன பணிப்பாளர் இறப்பின் காரணமாக, சட்ட நடைமுறைப்படுத்தல் காரணமாக, பதவிவிலகுவதன் காரணமாக அல்லது அகற்றப்படுவதன் காரணமாக

பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து நான்காண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி பெயர்குறித்து நியமிக்கும் குழுவின் தற்றுணிபில் மேலுமொரு பதவிக்காலப்பகுதியை விஞ்சாது மீள்நியமனத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இலங்கைக் கிரிக்கெட்டின் ஆளுகையிலும் நிருவாகத்திலும் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் நோக்கொன்றுடன், 9 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட முதலாவது சபையின் சுயாதீன பணிப்பாளர்கள் பின்வருமாறாக காலஇடைவெளியுடைய பதவிக்காலங்களுக்குப் பதவி வகித்தல் வேண்டும்:-

(அ) முதலாவது சபையின் இரண்டு சுயாதீன பணிப்பாளர்கள் அவர்களின் நியமனங்களின் தேதியிலிருந்து இலங்கைக் கிரிக்கெட்டின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் நடாத்துகைத் தேதி வரையில் பதவி வகித்தல் வேண்டும்;

(ஆ) முதலாவது சபையின் எஞ்சியுள்ள சுயாதீன பணிப்பாளர்கள் அல்லாத இரண்டு சுயாதீன பணிப்பாளர்கள் அவர்களின் நியமனங்களின் தேதியிலிருந்து இலங்கைக் கிரிக்கெட்டின் இரண்டாவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் நடாத்துகைத் தேதி வரையில் பதவி வகித்தல் வேண்டும்;

(இ) முதலாவது சபையின் எஞ்சியுள்ள சுயாதீன பணிப்பாளர்கள் அல்லாத இரண்டு சுயாதீன பணிப்பாளர்கள் அவர்களின் நியமனங்களின் தேதியிலிருந்து இலங்கைக் கிரிக்கெட்டின் மூன்றாவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் நடாத்துகைத் தேதி வரையில் பதவி வகித்தல் வேண்டும்;

(ஈ) முதலாவது சபையின் எஞ்சியுள்ள சுயாதீன பணிப்பாளர் அவரது நியமனத் தேதியிலிருந்து இலங்கைக் கிரிக்கெட்டின் நான்காவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் நடாத்துகைத் தேதி வரையில் பதவி வகித்தல் வேண்டும்,

அத்துடன் அத்தகைய சுயாதீன பணிப்பாளர்கள், வேறுவகையில் அவர்களிலிருந்தே உடன்பட்டாலொழிய, சீட்டிழுப்பினால் தெரிவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(3) முதலாவது சபையின் சுயாதீன பணிப்பாளரொருவர் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி மற்றும் 8 ஆம் பிரிவு என்பவற்றின் நியதிகளின்படி அடுத்துறுவதாக நியமிக்கப்பட்ட சபையொன்றின் சுயாதீனப் பணிப்பாளரொருவராக மீளநியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய சுயாதீன பணிப்பாளரொருவர் நான்கு ஆண்டுகளின் வேறொரு காலப்பகுதிக்கு மட்டும் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மேலதிக காலப் பகுதிக்கு நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது.

தேர்ந்தெடுகப் பட்ட பணிப்பாளர் களின் பதவிக்காலம்

**11.** (1) சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரும், இறப்பு, சட்ட அமுலாக்கல், பதவியிலிருந்து விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படல் காரணமாக அத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய, நான்காண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தல்வேண்டும்.

(2) ஆளொருவர், அத்தகைய ஆளின் வாழ்நாளில் தொடர்ச்சியாகவாயினுஞ்சரி அல்லது இடைவிடாயினுஞ்சரி எட்டு ஆண்டுகளை விஞ்சுகின்ற கூட்டுமொத்த காலப்பகுதி யொன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளராக சேவை யாற்றுதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளராகவோ அல்லது சுயாதீன பணிப்பாளராகவோ முன்னுரித்தாளர் சபையின் நிறைவேற்று குழுவின் பதவிதாங்குநராகவோ அல்லது உறுப்பினராகவோ பதவியில் சேவையாற்றிய எல்லாக் காலப்பகுதிகளும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னராகவோ அல்லது பின்னராகவோ ஏற்பட்டிருப்பினுஞ்சரி, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியை

கணக்கிடுவதில் கூட்டுமொத்தமாக்கப்பட்டு கணக்கிடப் படுதல் வேண்டும்.

(4) எந்த ஆள் (3) ஆம் உட்பிரிவின் கீழ் பதவியில் எட்டு ஆண்டுகள் அத்தகைய கூட்டுமொத்த சேவைப்பகுதியை பூர்த்திசெய்துள்ளரோ அந்த ஆள், தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நிரந்தரமாக தகவுடைமையற்றவராதல் வேண்டும். ஆளொருவர் அத்தகைய தெரிவின்போது, பதவியில் மேற்சொல்லப்பட்ட எட்டு ஆண்டுகள் ஆகக்கூடிய கூட்டு மொத்தசேவைப்பகுதியை விஞ்சாமல் நான்கு ஆண்டுகளின் முழுப் பதவிக் காலத்தையும் பூர்த்திசெய்வதற்கு அத்தகைய ஆள் இயன்றவறாகவிருப்பின் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளராக மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(5) பன்னிரெண்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரின் இறப்பின் மூலம், சட்டத்தின் அமுலாக்கலின் மூலம், பதவிவிலகுதல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் பதவிவெற்றிடமாகும் விடயத்தில், அத்தகைய வெற்றிடமானது அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அந்நோக்கத்துக்காக கூட்டப்பட்ட இலங்கை கிரிக்கெட்டின் விசேட பொதுக் கூட்டத்தில் வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரை தெரிவுசெய்வதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்.

சுயாதீனப் பணிப்பாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட பணிப்பாளர்களை பதவியிலிருந்து அகற்றுதல், அவர்கள் பதவியிலிருந்து விலகுதல் முதலியன

**12.** (1) சபையின் எவரேனும் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(2) சபையானது, பணிப்பாளர்களின் மூன்றிலிரண்டு வாக்குகளால் ஏற்கப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் 21 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று மற்றும் பிணக்குகள் குழுவினால் சபையின் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரின் துர்நடத்தைக்கு குற்றவாளியாக காணப்படின் அதற்காக குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக அகற்றலாம். சபையின்

பணிப்பாளர்களின் மூன்றில் இரண்டு வாக்குகள் தீர்மானம் கருத்திற்கொள்ளப்படுகின்றவருக்கு எதிரான பணிப்பாளரை விலக்களிப்பதன் மூலம் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) சபையின் எவரேனும் சுயாதீன பணிப்பாளர், சுகயீனம் இலங்கையில் இல்லாமை அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் தனது பதவியின் கடமைகளை புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, தெரிவுக் குழுவானது அத்தகைய சுயாதீன பணிப்பாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கு 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி எவரேனும் பொருத்தமான ஆளை பெயர்குறித்து நியமிக்கலாம். சபை அவரின் இல்லாமையின்போது, அத்தகைய இடத்தில் செயலாற்றுவதற்கு பெயர்குறித்த நியமனக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய ஆளை நியமித்தல் வேண்டும்.

(4) (அ) சபையின் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர், தவிசாளருக்கு முன்கூட்டியே அவரது இல்லாமையை அறிவிக்காமல் சபையின் அடுத்துவரும் மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்க தவறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) (2) ஆம் உட்பிரிவின்கீழ் சபையின் எவரேனும் சுயாதீன பணிப்பாளரை அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரை, அகற்றுகின்றவிடத்து,

விடயத்திற்கேற்ப, சபையானது தீர்மானத்தின்மூலம் சுயாதீன பணிப்பாளரொருவரின் விடயத்தில், 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதிய சுயாதீன பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கு பெயர்குறித்த நியமனக் குழுவை கோருதல் வேண்டுமென்பதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவரின் விடயத்தில், 11 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி,

வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவரை தேர்ந்தெடுப்பதற்கு விசேட பொதுக் கூட்டமொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க கோருதலும் வேண்டும்.

சபையின் கூட்ட நடப் பெண்ணும் கூட்டங்களும்

**13.** (1) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், சபையின் ஏழு பணிப்பாளர்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்களுள் ஆகக் குறைந்தது நால்வர் சுயாதீன பணிப்பாளர்களாகவிருத்தலும் வேண்டும்.

(2) சபையின் கூட்டத்தை தொடங்குவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்திலிருந்து முப்பது நிமிடங்களுக்குள் கூட்டநடப்பெண் சமூகமளிக்காதவிடத்து, கூட்டமானது அடுத்த வாரத்தின் அதே நாளில் அதே நேரத்திலும் இடத்திலும் அல்லது தவிசாளர் அல்லது அவரது இல்லாமையில் பிரதித் தவிசாளர் தீர்மானிக்கும் அத்தகைய வேறு தேதிக்கு, நேரத்துக்கு மற்றும் இடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில், கூட்டநடப்பெண்ணானது, சமூமளிக்கும் சுயாதீன பணிப்பாளர்களையும் தேர்ந்தெடுக் கப்பட்ட பணிப்பாளர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களையும் உள்ளடக்குதல் வேண்டும். அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் கூட்டநடப்பெண் சமூகமளிக்காதவிடத்து கூட்டமானது அத்தகைய கூட்ட நடப்பெண் திருப்திசெய்யப்படும் வரை அதே முறை மீண்டும் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும். குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னதாக சபையின் சுயாதீன பணிப்பாளர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களுக்கும் சபையின் ஏதேனும் கூட்டத்தின் எழுத்திலான அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும்:

ஆயின், சபையினால் முடிபு செய்யப்படக் கூடியவாறான ஏதேனும் கருமம், கிரிக்கெட் விளையாட்டு தொடர்பில் ஏதேனும் குறிப்பான ஊறு, இழப்பு, இடையூறு அல்லது இடரினை தடுப்பதற்கு தாமதமின்றிய மற்றும் உடனடியான செயற்பாட்டினை தேவைப்படுகின்றவிடத்து, சபைதவிசாளர் அத்தகைய அறிவித்தலை விட்டுவிடுவதற்கான அல்லது குறைப்பதற்கான தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(4) சபையின் கூட்டமொன்றில் –

(அ) கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட இடம், தேதி மற்றும் நேரமொன்றில் கூடியிருக்கும் கூட்ட நடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்; அல்லது

(ஆ) கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்; அல்லது

(இ) கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துரு வாக்குகின்ற (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட முறைகளினால் நடாத்தப்படலாம்.

(5) தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமில்லாதபோது, அத்தகைய கூட்டத்துக்கு பிரதித் தவிசாளர் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் இருவரும் சமுகமில்லாதபோது, சமுகமாயிருக்கும் சுயாதீன பணிப்பாளர்கள், அத்தகைய கூட்டத்தை தலைமைதாங்குவதற்கு சமுகமாயிருக்கும் சுயாதீன பணிப்பாளர்களிலிருந்து சுயாதீன பணிப்பாளரொருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) சபையின் ஏதேனும் கூட்டத்திலான எல்லா முடிபுகளும், அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் ஆக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 17 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் சபையின் தீர்மானம் என்ற வழிமூலம் ஏற்கப்படலாம். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். தவிசாளர் சமுகமாகவில்லாத போது, பிரதித் தவிசாளர் அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் இருவரும் சமுகமில்லாதபோது, அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கு சமுகமாயிருக்கும் சுயாதீன பணிப்பாளர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயாதீன பணிப்பாளரொருவர் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர்கள் என்போர் அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) சபையின் கூட்டங்கள், சபையினால் காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகள் மற்றும் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

சபையின் செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாக செல்லுபடியற்ற தாகக் கருதப் படுதலாகாது

**14.** சபையானது, சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண்ணை அமைத்துருவாக்குவதற்கு போதுமான சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை இருக்கும்வரை, சபையில் ஏதேனும் வெற்றிடம் எது எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம். சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளது அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது அல்லது செல்லுபடியற்றதாக கருதப்படுதலாகாது.

சபையின் கூட்டங்களுக்கு சமுகமா யிருத்தலுக் கான ஊதியம்

**15.** சுயாதீன பணிப்பாளர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரும், 21 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளுகை மட்டும் நேர்மைத்தன்மை குழு வினால் விதந்துரைக்கப்பட்டவாறான மற்றும் எந்த அமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்டவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

நிதிசார் அல்லது வேறு அக்கறை களின் முரண்பாடு

**16.** (1) சபையினால் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஏதேனும் பெறுகை, கருமம் அல்லது முடிபுகளில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறையைக் கொண்டுள்ள எவரேனும் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர், எக் கூட்டத்தில் அத்தகைய கருமம் கவனத்துட்கொள்ளப்படுமோ அக்கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மை மற்றும் அளவுகளை வெளிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் முறையாக பதியப்படுதலும் வேண்டும். அத்தகைய சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர், அக்கருமம் தொடர்பான ஏதேனும் கலந்துரையாடலில், கலந்தாராய்வில் அல்லது முடிபாக்க செயன்முறையில் பங்குபற்றுதலாகாது என்பதுடன் அதன்கண் வாக்கெடுப்பி லிருந்தும் தவிர்த்திருத்தல் வேண்டும்.

(2) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் விசாரணைக்கு உட்பட்டிருக்கும் அல்லது சபையின் பணிகளில் அத்தகைய சுயாதீன

பணிப்பாளரின் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப் பாளரின் செயலுறு பங்கேற்பை தடுப்பதற்காக குறிப்பாக ஏற்பாடு செய்யப்படாத அத்தகைய வேறு அக்கறை முரண் பாட்டை கொண்டிருக்கும் எவரேனும் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர், சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின் மூலம் இடைநிறுத்தப் படுதல் வேண்டும் .

சபையின் தீர்மானத்தை கடைப்பிடித்தல்

**17.** சபையின் தீர்மானம் ஒவ்வொன்றும் அத்தகைய தீர்மானம் உறுப்பினர்களிடையே முன்கூட்டியே சுற்றறிக்கை செய்வதன் மூலம் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தீர்மானம் எதுவும் சபை உறுப்பினர் ஒவ்வொரு வரும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தீர்மானத்தை முன் கூட்டியே பெற்றிருந்தாலொழிய சபையின் கூட்ட மொன்றில் கடைப்பிடிக்கப்படுதலாகாது.

உடனடி முன்னாள் தவிசாளர், பிரதி தவிசாளர் சுயாதீன பணிப் பாளர்களால் அல்லது தேர்ந் தெடுக்கப்பட்ட பணிப்பாளர் களால் ஆவணங்கள் கையளிப்பு

**18.** பதவிக்காலம் முடிவுறும் தவிசாளர், பிரதி தவிசாளர், சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப் பாளர் ஒவ்வொருவரும் இலங்கை கிரிக்கெட்டின் கருமங்கள் தொடர்பான எல்லா ஆவணங்களையும் விடயத்துக்கேற்ப, சபையின் தவிசாளர் உபதவிசாளருக்கு கையளித்தல் வேண்டும்.

உறுதிகள், கைமாற்றங்கள், உரித்து மாற்றங்கள், உடன் படிக்கைகள் முதலியவற்றை கையொப்ப மிடுதல், நிறை வேற்றுதல், அத்தாட்சிப் படுத்தல் முதலியவற்றுக் கான அதிகாரம்

**19.** சபையின் தவிசாளர், இலங்கை கிரிக்கெட்டின் பிரதான நிறைவேற்று அலுவலர், அத்தகைய நோக்கத்துக்காக சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர், சபையின் தீர்மானத்தின்மூலம் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது இலங்கை கிரிக்கெட்டின் அலுவலர், இலங்கை கிரிக்கெட்டின் அலுவல்கள், நிருவாகம், தொழில், தொழிற்பாடுகள், உரிமைகள், கடப்பாடுகள் மற்றும் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட எத்தகையதுமான எல்லா உறுதிகள், கைமாற்றங்கள், உரித்துமாற்றங்கள், உடன் படிக்கைகள், ஒப்பந்தங்கள், சாதனங்கள், வழக் குரைகள், விண்ணப்பங்கள், சத்தியக்கடதாசிகள், வங்கி ஆவணங்கள், உத்தரவாதங்கள், பிணைப்பொறுப்புக்கள், பொறுப்புமுயற்சிகள், கூட்டுநிறுவன கோப்பிடல்கள், தொடர்பாடல் மற்றும் வேறு எல்லா ஆவணங்களையும்

எழுத்துக்களையும் சாதனங்களையும் இலங்கை கிரிக்கெட் சார்பில் கையொப்பமிட, நிறைவேற்ற, அத்தாட்சிப்படுத்த, சான்றுப்படுத்த மற்றும் அளிக்க அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் இலச்சினை

**20.** (1) இலங்கை கிரிக்கெட்டின் பொது இலச்சினையானது, ஏதேனும் ஆவணத்தில் பொறிக்கப்படும்போது, எவரேனும் சுயாதீன பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது சபையின் தீர்மானத்தின் மூலம் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை கிரிக்கெட்டின் எவரேனும் அலுவலருடன் சேர்த்து தவிசாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் கையொப்பங்களினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, எச்சாதனங்களிலும் ஆவணங்களிலும் இலங்கை கிரிக்கெட்டின் இலச்சினை பொறிக்கப்பட்டதோ அச்சாதனங்களினதும் ஆவணங்களினது இடப்பொன்றை பேணுதல் வேண்டும்.

குழுக்களை நியமித்தல்

**21.** (1) இலங்கை கிரிக்கெட்டின் அலுவல்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் நிருவாகத்துக்காக மற்றும் ஆளுக்கைக்காக சபையானது பின்வரும் குழுக்களை நியமிக்கலாம் :-

(அ) கிரிக்கெட் குழு;

(ஆ) நிதி, கணக்காய்வு மற்றும் முதலீட்டுக் குழு;

(இ) தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல்வாங்கல்கள் குழு;

(ஈ) தேசிய ஆண்கள் தெரிவுக் குழு;

(உ) தேசிய பெண்கள் தெரிவுக் குழு;

(ஊ) (இலங்கை கிரிக்கெட்டின் சுயாதீன ஆட்களை கொண்டிருக்க வேண்டிய) ஒழுக்காற்று மற்றும் பிணக்குகள் குழு;

(எ) மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு;

(ஏ) உள்நாட்டு கிரிக்கெட் அலுவல்கள் குழு;

(ஐ) சர்வதேச கிரிக்கெட் அலுவல்கள் குழு;

(ஒ) ஆளுகை மற்றும் நேர்மைக் குழு;

(ஓ) பெண்கள் கிரிக்கெட் குழு;

(ஔ) பாடசாலை கிரிக்கெட் குழு; அத்துடன்

(க) (விளையாட்டு வீரர்கள் கழகத்திலிருந்தான பிரதிநிதியொருவர் உள்ளடங்கலாக) விளை யாட்டு வீரர்கள் குழு.

(2) சபையானது, காலத்துக்குக்காலம் அது அவசிமெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் துணைக் குழுவை நியமிப் பதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆள் எவரும், அத்தகைய ஆள் விளையாட்டுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்குமுன்னர் பதிவு செய்யப்பட்ட, கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரொருவராக, இலங்கை கிரிக்கெட் சபையின் பணிப்பாளரொருவராக அல்லது பதவி தாங்குநரொருவராக, இலங்கை கிரிக்கெட்டினுள்ள ஏதேனும் குழுவின் அல்லது துணைக்குழுவின் பணிப்பாளரொருவராக அல்லது உறுப்பினரொருவராக அவரது அல்லது அவளது வாழ்நாளில் மொத்தமாக எட்டு ஆண்டுகள் சேவையாற்றிய துணைக்கோ நியமிக்கப்பட்ட அல்லது மீள் நியமிக்கப்பட்ட தகவுடையோராதல் ஆகாது.

(4) சபையானது, 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் குழுவுக்கு அல்லது துணை குழுவுக்கு ஆட்களை நியமிக்க தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) அத்தகைய நியமனங்களை செய்வதில், சபையானது, அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இயைபான குழு அல்லது துணைக்குழுக்கள் என்பவற்றின் பொறுப்புக்களை பயனுறுமுறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமான தேவைப்படும் சிறந்த ஒழுக்கம் மற்றும் நிலைத்திருக்கும் நெறிகள், நிபுணத்துவம், அனுபவம் மற்றும் திறன்கள் என்பவற்றைக் கொண்டுள்ளனர் என்று உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) அத்தகைய குழுக்கள் அல்லது துணைக்குழுக்களின் அமைப்பானது அத்தகைய குழுக்களின் அல்லது துணைகுழுக்களின் கலந்தாராய்வுகளுக்கும் பணிகளுக்கும் எவ்வாட்கள் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கமுடியுமென சபை கருதுகிறதோ அவ்வாட்கள் உள்ளடங்கலாக, எவ்வாட்கள் இலங்கை கிரிக்கெட்டின் பணிப்பாளர்களோ அல்லது ஊழியர்களோ இல்லையோ அவ்வாட்களை உள்ளடக்கலாம்.

(7) சபையானது, அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் அல்லது துணைக்குழுவுக்கும் உபவிதிகளினால் குறித்துரைக்கக் கூடியதான அதன் பணிப்பாணை, தத்துவங்கள், அமைப்பு, அறிக்கையிடல் கடப்பாடுகள் மற்றும் அத்தகைய வேறு கருமங்களை குறித்துரைக்கின்ற எழுத்திலான குறிப்பீட்டு நியதிகளை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படுத்துதல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு குழுவும் துணைக் குழுவொன்றை நியமிப்பதற்கான தத்துவம் உள்ளடங்கலாக, இயைபான குழுவின் குறிப்பீட்டு நியதிகளின்படி சபையினால் அங்கீகரிக்கப் படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் அதிகாரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(9) குழு மற்றும் துணைக்குழு ஒவ்வொன்றினதும் கூட்டங்களும் நடவடிக்கைமுறைகளும், ஒவ்வொரு குழு அல்லது துணைக்குழுவின் குறிப்பீட்டு நியதிகளால் ஆளப்படுதல் வேண்டும்.

(10) சபையின் தவிசாளர், மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர் பதவிவழி உறுப்பினரொருவராக ஒழிக்காற்று மற்றும் பிணக்கு குழு தவிர்ந்த ஏதேனும் குழுவின் அல்லது உப குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு உரிமையை கொண்டிருத்தல் வேண்டும். ஆனால், ஏதேனும் குழுவில் அல்லது உபகுழுவில் ஏதேனும் கூட்டத்தில் வாக்களித்தலாகாது.

(11) நிகழ்ச்சிக் குறிப்புக்கள் குழுக்கள் மற்றும் துணைக்குழுக்களின் கூட்டங்களில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அக்கூட்டங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் விதப்புரைகளின் சுருக்கங்களும் அதனது அடுத்த கூட்டத்தில் சபைக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் III

## பெயர் நியமனக் குழு

பெயர் நியமனக் குழு

**22.** (1) பெயர் நியமனக் குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் ஆண்டு 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் பேரவைத் தலைவர் அல்லது அத்தகைய பேரவைத் தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினர்;

(ஆ) இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் அல்லது அத்தகைய சங்கத்தின் தலைவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய சங்கத்தின் எவரேனும் உறுப்பினர்;

(இ) (289 ஆம் அத்தியாயமான) வர்த்தக பணியகம் கட்டளைச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக பணியக்குழுவின் தவிசாளர் அல்லது அத்தகைய குழுவின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய குழுவின் எவரேனும் உறுப்பினர்;

(ஈ) இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் விளையாட்டுக்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட விளையாட்டு அபிவிருத்து திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி என்னும் பதவிவரிசைக்கு குறையாத அத்தகைய அமைச்சின் அலுவலரொருவர்;

(உ) இலங்கைப் பணிப்பாளர்கள் நிறுவகத்தின் தவிசாளர் அல்லது அதன் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினர்;

(ஊ) 1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் குழுத் தலைவர் அல்லது அத்தகைய குழுவின் தலைவரினால் பெயர் குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினர்; அத்துடன்

(எ) விளையாட்டுக்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் பேரவையின் தவிசாளர் அல்லது அதன் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் பேரவையின் உறுப்பினர்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர் நியமனக் குழுவின் உறிப்பினரொருவராக பெயர் குறித்து நியமிக்கப்படுகின்றவிடத்து, பெயர் நியமனத்தைச் செய்கின்ற ஆள், நியமத்தர் –

(அ) நல்ல பெயர் ஒழுக்க அந்தஸ்து மற்றும் குணவியல்புகளையுடைய ஆளொருவர்;

(ஆ) இயைபான துறையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையும் கணிசமானளவு அனுபவத் தையும் உடைய புகழ்பெற்ற ஆளொருவர்; அத்துடன்

(இ) ஏழாம் பிரிவின் நியதிகளின்படி தகைமை யீனங்களுக்கு உட்டபட்டவரல்ல;

பெயர் நியமனக் குழுவின் உறுப்பின ரொருவராக பணியாற்று வதற்கான அல்லது பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படு வதற்கான தகைமையீனம்

**23.** ஆளொருவர் இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினரின் ஏதேனும் வகுதியின் பதவிதாங்குநரொருவராக அல்லது சபையின் எவரேனும் சுயாதீன பணிப்பாளராக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளராக அல்லது 7 ஆம் பிரிவின் நியதிகளிலான எவையேனும் தகைமையீனங்களுக்கு உட்பட்டவராக இருப்பின் அல்லது அவரின் பெயர் குறித்த நியமனக் குழுவின் உறுப்பினரொருவராக பணியாற்று வதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

பெயர்குறித்த நியமனக் குழுவின் தவிசாளர்

**24.** (1) பெயர்குறித்த நியமனக் குழுவின் தவிசாளர், பெயர் நியமனக் குழுவின் உறுப்பினர்களால் அவர்களிலிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) தவிசாளர், சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறேதேனும் காரணத்துக்காக தமது பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து,பெயர் நியமனக் குழுவின் உறுப்பினர்கள், தவிசாளராக செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

பெயர்குறித்த நியமனக் குழுவின் பதவி வறிதாதல்

**25.** பெயர்குறித்த நியமனக் குழுவின் உறுப்பினரொருவர், இறக்கின்றவிடத்து, பதவிவிலகுகின்றவிடத்து அல்லது 23 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளில் தகைமையற்றவராக அல்லது இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர்களின் ஏதேனும் வகுதியின் பதவிதாங்குநராக வருகின்றவிடத்து, அத்தகைய வெற்றிடம், 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கவனத்துட்கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

பெயர்குறித்த நியமனக் குழுவின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டமும்

**26.** (1) பெயர்குறித்த நியமனக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், தவிசாளர் உள்ளடங்கலாக நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பெயர்குறித்த நியமனக் குழுவின் கூட்டமொன்று ஒன்றில் –

(அ) கூட்டத்துக்காக குறித்தளிக்கப்பட்ட இடம், தேதி மற்றும் நேரமொன்றில் கூடியிருக்கின்ற கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்;

(ஆ) கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்ற சமகால கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்; அல்லது

(இ) கூட்ட நடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்ற (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட முறைகளின் சேர்க்கை மூலம் நடாத்தப்படலாம்.

(3) பெயர் நியமனக் குழுவின் ஏதேனும் கூட்டத்திலான எல்லா முடிபுகளும், அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து

வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் ஆக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், அக்கூட்டத்தின் தவிசாளர், அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர், சமுகமளிப்பின், பெயர் நியமனக் குழுவின் எல்லாக் கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் சமுகமில்லாதபோது, கூட்டத்தில் சமுகமளித்த உறுப்பினர்களால் அவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர், அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும்.

(5) பெயர் நியமனக் குழுவின் கூட்டங்கள், காலத்துக்காலம் விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட நடபடிமுறைகளுக்கு இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## இலங்கை கிரிக்கெட்டின் நிறங்கள், மகுடம், போசகர் மற்றும் உறுப்பினர்கள்

இலங்கை கிரிக்கெட்டின் அலுவலக முறையான நிறங்கள்

**27.** இலங்கை கிரிக்கெட்டின் அலுவலக முறையான நிறங்களும் மகுடமும் விதிகள் என்ற வழிவகைமூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் போசகர்

**28.** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, இலங்கை கிரிக்கெட்டின் போசகராக இருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இலங்கை கிரிக்கெட்டின் போசகராக இருப்பதற்கு சனாதிபதி மறுப்பாராயின், சபையின் வேண்டுகோளின்பேரில், எந்த வேறு எவரேனும் ஆள் போசகர் பதவிக்கு உடன்பட்டு ஏற்றுக்கொள்கிறாரோ அந்த வேறு எவரேனுமாள் போசகராக இருத்தல் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர் களை பதிவுசெய்தல்

**29.** (1) இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர்கள், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் மற்றும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட

தகவுடைமைக் கட்டளைக்கல்லுடன் இசைந்தொழுகும் முன்னுரித்தாளர் குழுவுடன் பதிவுசெய்யப்பட்ட கழக சம்மேளனம் அல்லது குழு ஒவ்வொன்றும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து முப்பது நாட்கள் என்னும் காலப்பகுதியினுள் விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட முறையில் இலங்கை கிரிக்கெட்டினை பதிவுக்காக ஏற்புடமையாக்கலாம்.

(3) இலங்கை கிரிக்கெட்டானது, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தகவுத்திறன் கட்டளைக்கல்லை பூர்த்திசெய்கின்ற இலங்கை கிரிக்கெட் உறுப்பினர்களின் எல்லா வகுதிகளையும் பதிவு செய்ய செய்வித்தல் வேண்டுமென்பதுடன் விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தினால் பதிவுச்சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும். அத்தகைய பதிவு, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

(4) சபையானது, விதிகள் என்ற வழிவகைமூலம் இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பாண்மையின் ஒவ்வொரு வகுதிக்கும் ஏற்புடையற்பாலதான ஆளும் நியமங்கள், கணக்குகள், நிருவாகம் மற்றும் கிரிக்கெட் தொழிற்பாடுகள் மற்றும் வேறு எவையேனும் நிதிசார் நிபந்தனைகளை குறித்துரைக்கலாம் என்பதுடன் காலத்துக்குகாலம் அவசியமெனக் கருதுகின்ற வாறான அவற்றினை திருத்தலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

உறுப்பாண்மைக் கட்டணங்கள்

**30.** (1) இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர்களின் ஒவ்வொரு வகுதிக்குமான உறுப்பாண்மைக் கட்டணம் மற்றும் வருடாந்த ஒப்பப்பணக் கட்டணம், விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) எல்லா உறுப்பாண்மைக் கட்டணங்களும் வருடாந்த ஒப்பப்பணங்களும் காலத்துக்காலம் வலுவிலுள்ள எல்லா ஏற்புடையற்பாலதான அரசாங்க விதிகளுக்கு அமைந்ததாக விருத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு நிதியாண்டுக்குமான வருடாந்த ஒப்பப் பணமானது, இயைபான ஆண்டுக்கு உடனடியாக முற்போந்த ஆண்டின் திசெம்பர் மாதத்தின் முப்பத்தியொராம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆண்டிறுதி ஒப்பப்பணம் செலுத்தப்படாத பட்சத்தில், இலங்கை கிரிக்கெட்டின் தவறுகின்ற உறுப்பினர், வருடாந்த ஒப்பப்பணத்தின் இருமடங்குச் சமமான தாமத கொடுப்பனவு கட்டணத்தை அடுத்த ஆண்டின் ஏப்பிறல் முப்பதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதற்கு பொறுப்பாதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினரொருவர் (இப்பிரிவில் "உரிய தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தாமத கொடுப்பனவு கட்டணத்துடன் சேர்த்து வருடாந்த ஒப்பப்பணத்தையும் செலுத்த தவறும் பட்சத்தில், அத்தகைய உறுப்பினர், தனது வாக்களிக்கும் உரிமைகளை தானாகவே இழத்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினரொருவர் உரியதேதியின் உடன் பின்னரான நாளன்று தொடங்குகின்ற ஆறுமாத காலப்பகுதியினுள்ளான ஒப்பப்பணமாக மற்றும் தாமதக் கொடுப்பனவாக செலுத்தப்படற்பாலதான தொகையைச் செலுத்துவதற்கு தவறுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினர் உறுப்பினர்களின் இடாப்பிலிருந்து அகற்றப்படுவதற்கு ஆளாகவிருத்தலும் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பாண்மையை இடைநிறுத்தல், இல்லாதொழித்தல் அல்லது வேறுவகையில் முடிவுறுத்தல்

**31.** அத்தகைய உறுப்பினர் இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை அல்லது இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பாண்மையை பதிவுசெய்வதற்கு இணைக்கப்பட்ட ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை மீறுகின்றவிடத்து, இலங்கை கிரிக்கெட் 21 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒழுக்காற்று மற்றும் பிணக்குகள் குழுவினால் ஆக்கப்பட்ட விதப்புரையின்மீது இலங்கை கிரிக்கெட்டின் எவரேனும் உறுப்பினரின் உறுப்பாண்மையை இடைநிறுத்த, அகற்ற அல்லது வேறுவகையில் முடிவுறுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் வருடாந்த பொதுக் கூட்டமும் விசேட பொதுக் கூட்டமும் மற்றும் வாக்களிக்கும் உரிமைளைப் பிரயோகித்தலும்

**32.** (1) இலங்கை கிரிக்கெட் சபை, ஒவ்வொரு நிதியாண்டினதும் முதல் ஆறுமாத காலப்பகுதியினுள் அதன் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துவதை சபை உறுதிசெய்தல் வேண்டும்.

(2) இலங்கை கிரிக்கெட் உறுப்பினர்களில் தரவரிசை “அ” உறுப்பினர்கள், தரவரிசை “ஆ” உறுப்பினர்கள் மற்றும் மாகாண கிரிக்கெட் கழகம், (இதனகத்துப்பின்னர் “வாக்களிக்கும் உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை கிரிக்கெட்டின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு தகவுடையோராதல் வேண்டும்.

(3) வாக்களிக்கும் உறுப்பினர்கள், இலங்கை கிரிக்கெட்டின் பொதுக் கூட்டத்திற்கு சமுகமளிக்கவும் பிரதிநிதித்துவப்படுத்தவும் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய உறுப்பினர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கிணங்க வாக்களிக்கும் உரிமைகளைப் பிரயோகிக்கவும் தகவுடையோராதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு வாக்களிக்கும் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினரால் வழங்கப்பட்ட முறையாக பூர்த்திசெய்யப்பட்ட எழுத்திலான பெயர் நிமனமொன்றின்மூலம், இலங்கை கிரிக்கெட்டின்ஏதேனும்பொதுக்கூட்டத்திற்குசமுகமளிக்கவும் பங்கேற்கவும் அவ்வுறுப்பினரின் வாக்களிக்கும் உரிமையை பிரயோகிக்கவும் பிரதிநிதியொருவரை அதிகாரமளித்தல் வேண்டும்.

(5) வாக்களிக்கும் உறுப்பினரின் முறையாக அதிகார மளிக்கப்பட்ட பிரதிநிதி ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் அவன் அல்லது அவள் பிரதிநிதித்துவப்படுத்தும் அத்தகைய உறுப்பினருக்கு குறித்தொதுக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை பிரயோகிப்பதற்கு தகவுடையோராதல் வேண்டும் என்பதுடன் அதே பொதுக் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்களிக்கும் உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்துதல் ஆகாது.

(6) தரவரிசை “இ” உறுப்பினர்கள், முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலம் அவதானிப்பாளர் என்ற தன்மையில் மட்டுமே பொதுக் கூட்டங்களுக்கு சமுகமளிக்க தகவுடையோராதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொதுக்கூட்டத்தில் கலந்தாராய்வில் பங்குபற்றவோ அல்லது அதில் வேறு ஏதேனும் உரிமையை பிரயோகிக்கவோ தகவுடையோராதல் ஆகாது.

(7) தரவரிசை “இ” உறுப்பினர்கள் தவிர்ந்த வாக்களிக்காத உறுப்பினர்கள் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி யொருவர் மூலம், அவதானிப்பாளரொருவர் என்ற

தன்மையில் மட்டுமே பொதுக் கூட்டங்களுக்கு சமுகமளிக்க தகவுடையோராதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொதுக் கூட்டத்தின் கலந்தராய்வுகளில் பங்கேற்கவோ அல்லது அதில் ஏதேனும் உரிமையை பிரயோக்கவோ தகவுடையோராதல் ஆகாது.

(8) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது பிரதிநிதிகளின் பெயர் இயைபான பொதுக் கூட்டத்தின் தேதிக்கு முன்னர் ஏழு நாட்களுக்கு குறையாமல், இலங்கைக் கிரிக்கெட்டின் இயைபான உறுப்பினரின் தலைவர் மற்றும் செயலாளரினால் இலங்கை கிரிக்கெட்டுக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(9) வாக்களிக்கும் உறுப்பினரை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஆள் எவரும், அதே பொதுக் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தன்மையில் வாக்களிக்கும் உரிமைகளை பிரயோகித்தல் ஆகாது.

(10) பொதுக் கூட்டமொன்றில் உறுப்பினரொருவரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவர், பின்வரும் ஆளொருவராக இருத்தல் வேண்டும் –

(அ) அத்தகைய உறுப்பினர் கழகத்தின் அல்லது சங்கத்தின் நிறைவேற்றுக்குழு அல்லது அதற்குச் சமமான முடிபாக்கல் குழுவின் உறுப்பினரொருவர்;

(ஆ) ஐந்து ஆண்டுகளுக்கு குறையாத தொடர்ச்சியான காலப்பகுதியொன்றுக்கு இயைபான கழகத்தின் அல்லது சங்கத்தின் உறுப்பினராக இருந்தவர்.

(11) சபையானது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் விதிகளின் மூலம் பொதுக் கூட்டங்களுக்கான பிரதிநிதிகளின் பெயர் நியமனம், சரிபார்த்தல் மற்றும் பங்குபற்றுகை தொடர்பான மேலதிக தகவுத்திறன் கட்டளைக்கல், நடபடிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை குறித்துரைக்கலாம்.

(12) இலங்கைக் கிரிக்கெட்டில் ஏதேனும் பொதுக் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் வாக்களிக்கும் உறுப் பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

(13) விதிகளால் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய காலத்தினுள் ஏதேனும் பொதுக் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண்ணானது வருகைதராதவிடத்து, பொதுக் கூட்டத்தின் தவிசாளர் அல்லது அவரது இல்லாமையில் இலங்கை கிரிக்கெட்டின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர். சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு தேதிக்கு அத்தகைய பொதுக் கூட்டத்தை ஒத்திவைத்தல் வேண்டும். அதே நிகழ்ச்சி நிரலுடன் ஒத்திவைக்கப்பட்ட பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தலானது பதினான்கு நாட்களை விஞ்சாது வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் வருகையானது, கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்கல் வேண்டுமென்பதுடன் நிகழ்ச்சி நிரலிலுள்ள அலுவல்களை முழுமையான வலிதுடைமையுடனும் அதிகாரத்துடனும் தொடரலாம்.

(14) பொதுக் கூட்டத்தில் ஏற்கப்பட்ட நடவடிக்கைமுறைகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் குறித்துரைக்கப் படக்கூடியவாறாயிருத்தல் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர் களின் அமைப்பு

**33.** (1) நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஊழலற்ற நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்கு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறாக உறுப்பாண்மையின் நிபந்தனைகள், பதவிதாங்குநர்களின் நியமன மற்றும் பதவி அகற்றலின், பதவிக்கால மட்டுப்பாடுகள், ஆளுகை குழுவின் கூட்டங்கள் மற்றும் உறுப்பாண்மை, ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள், முரண்பாட்டு அக்கறைகள், தொடர்புடைய திறத்தவரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ள அமைப்பொன்றை இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர் ஒவ்வொரு வரும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வழிகளில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் இலங்கை கிரிக்கெற்றுக்கு அங்காரத்துக்காக அத்தகைய அமைப்பை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) இலங்கை கிரிக்கெட்டின் எவரேனும் உறுப்பினர், (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய அங்கீகாரத்தை பெறத் தவறுமிடத்து, இலங்கை கிரிக்கெற்றானது அத்தகைய உறுப்பினரின் உறுப்பாண்மையை இடைநிறுத்தலாம் அல்லது முடிவுறுத்தலாம்.

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர் களின் கடமைகள்

**34.** (1) இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு ஆண்டினதும் ஏப்பிறல் முப்பதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வருடாந்த பொதுக் கூட்டத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் பின்வரும் ஆவணங்களை இலங்கை கிரிக்கெட்டின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்:-

(அ) ஏற்புடையற்பாலனதாயின், அத்தகைய ஆண்டிறுதி பொதுக் கூட்டத்தில் தேர்ந் தெடுக்கப்பட்ட பதவிதாங்குநர்களின் மற்றும் ஆண்டிறுதி பொதுக் கூட்டத்தில் சமூமளிக்கும் உறுப்பினர்களின் பட்டியலுடன் சேர்த்து வருடாந்த பொதுக் கூட்டத்தின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள்;

(ஆ) சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுப்பாண்மைப் பட்டியலொன்றுடன் சேர்த்து அதன் உறுப் பாண்மை இடாப்பில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடும் இலங்கைக் கிரிக்கெட் உறுப்பினர்களின் தலைவர் அல்லது செயலாளரினால் கூற்றொன்று;

(இ) பட்டயக் கணக்காளர்கள் குழுமத்தினால் முறையாக கணக்காய்வு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏற்கப்பட்டதுமான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள்;

(ஈ) இயைபான காலப்பகுதிக்காக இலங்கை கிரிக்கெற்றுக்கு ஏற்புடையற்பாலனவான வருடாந்த ஒப்பக் கட்டணச் செலுத்துகையின் எண்பிப்பு.

(2) விதிக்கப்பட்ட காலத்தினுள் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்குத் தவறுகின்ற அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களைக் கொடுத்துதவுவதற்கு தவறுகின்ற இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினரொருவர் இலங்கைக் கிரிக்கெட்டின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற அல்லது வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(3) உறுப்பினரொருவர், இயைபான ஆண்டின் மே முதலாம் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்த பின்னர் மேற்சொல்லப்பட்ட ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்றவிடத்தும் அத்தகைய ஆறு மாதக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வலிதான ஏதுக்களால் அத்தகைய தவறுகை நியாயப்படுத்தப்பட்டாலொழியவும் கிரிக்கெட்டின் விசேட பொதுக் கூட்டமொன்றில் பெரும்பான்மையான உறுப்பினர்களால் அத்தகைய ஏதுக்கள் அங்கீகரிக்கப்பட்டாலொழியவும் அத்தகைய உறுப்பினர், இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினராக தானாகவே இல்லாதொழிதல் வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டின் சுற்றுப் போட்டிக் கட்ட மைப்பு

**35.** (1) சபையானது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் இலங்கைக் கிரிக்கெட்டின் சுற்றுப்போட்டிக் கட்டமைப்பைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) இலங்கை கிரிக்கெட்டின் முதலாவது சுற்றுக் கட்டமைப்பானது 46 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்குச் செய்யப்பட தேவைப்படும் ஏதேனும் திருத்தம் 44 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்துக்கு அமைய ஆக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் V

## இலங்கைக் கிரிக்கெட்டின் நிதியம்

இலங்கைக் கிரிக்கெட்டின் நிதியம்

**36.** (1) இலங்கைக் கிரிக்கெட்டினானது, அதன் சொந்த நிதியத்தை நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின்கீழ் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் இலங்கைக் கிரிக்கெட்டினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இலங்கையினுள்ளே அல்லது வெளியே ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுவிடமிருந்து காசாக அல்லது வேறு வகையில் மானியக்கொடைகளாக, கொடைகளாக அல்லது நன்கொடைகளாக என்றவகையாக இலங்கைக் கிரிக்கெட்டினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் இலங்கைக் கிரிக்கெற்றால் அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் சபையால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) இலங்கைக் கிரிக்கெட்டின் நிதியத்திற்கு கிடைக்கப் பெறும் எல்லாப் பணத்தொகைகளும், காலத்துக்குக் காலம் சபையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

(5) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரம்பினை விஞ்சுகின்ற எல்லா கொடுப்பனவுகளும் நடைமுறைக்குகந்தனவான செலுத்துகைகளும் சாத்தியமான இடங்களிளெல்லாம் காசோலை, இலத்திரனியல் நிதிக் கைமாற்றம் அல்லது சபையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வங்கி அல்லது எண்ணிம கொடுப்பனவு வழிமுறைகளில் செய்யப்படுதல் வேண்டும்.

(6) எல்லா காசோலைகள், வரைவுகள் மற்றும் பிற வங்கியியல் சாதனங்கள் பின்வரும் முறையில் கையொப்பமிடப்படுதல் அல்லது அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒரு கையொப்பமிடுபவர், சபைத் தவிசாளர் அல்லது தவிசாளரின் இல்லாமையில் அத்தகைய நோக்கத்துக்காக சபையால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் சுயாதீன பணிப் பாளரொருவர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இரண்டாம் கையொப்பமிடுபவர், சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது எவரேனும் வேறு சுயாதீனப் பணிப்பாளர் அல்லது தேர்ந்தெடுக்கபட்ட பணிப்பாளர் அல்லது அத்தகைய நோக்கத்துக்காக சபையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராதல் வேண்டும்.

(7) இலங்கைக் கிரிக்கெட்டின் வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைப்பதற்காக காசோலைகள், கட்டளைகள் மற்றும் வேறு ஒத்த தன்மையினதான வேறு சாதனங்களை புறக்குறிப்பிடுவதற்கு சபையானது, பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், காலத்துக்குக் காலம் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிதிக் கட்டுப்பாடுகள் நடவடிக்கைமுறைகள் மற்றும் எல்லைகள் என்பவற்றுக்கமைய சபையானது, செலுத்துகைகளை அங்கீகரிப்பதற்கும் அல்லது அதிகாரமளிப்பதற்கும் சிரேட்ட முகாமையாளரொருவர் அல்லது மேலான பதவியைக் கொண்டிருக்கின்ற இலங்கைக் கிரிக்கெட்டின் எவரேனும் அலுவலரை அல்லது ஊழியரை எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

**37.** (1) இலங்கைக் கிரிக்கெட்டின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

(2) சபையானது, இலங்கைக் கிரிக்கெட்டின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் எல்லா வேறு கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், இலங்கைக் கிரிக்கெட்டின் கணக்குகளின் கணக்காய்வுக்கும் அவை தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் VI

## பிரதான நிறைவேற்று அலுவலரும் பணியாட்டொகுதியும்

**38.** (1) சபை பிரதான நிறைவேற்று அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும். சபையினால் அவருக்கான தகைமைகள் மற்றும் தொழில் நியதிகளும் நிபந்தனைகளும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். பிரதான நிறைவேற்று அலுவலரின் ஊதியம், மனிதவளங்கள் மற்றும் ஊதியக் குழுவினால் விதித்துரைக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

பிரதான நிறைவேற்று அலுவலரின் நியமனம்

(2) சபையானது பிரதான நிறைவேற்று அலுவலராக எவரேனும் ஆளை நியமித்தலாகாதென்பதுடன் அவ்வாள் –

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூராட்சி அதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைக் கிரிக்கெட்டின் ஊழியரொருவராக அல்லது ஏவரேனும் உறுப்பினரின் பதவி தாங்குநராக இருந்தால் அல்லது வந்தால்;

(இ) இலங்கைக் கிரிக்கெட்டின் பதவி தாங்குநரொருவராக அல்லது அலுவலரொருவராக அல்லது ஊழியரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஈ) அவரது கடமைகளை கொண்டு நடாத்த ஆற்றலற்றவராக அல்லது புத்திசாதுரியமற்றவராக இருந்தால் அல்லது வந்தால்;

(உ) பொறுப்புவிடுக்கப்படாத வங்கி முறிந்தவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஊ) ஒழுக்கக்கேடானதவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப் பட்டால் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால்;

(எ) பிரதான நிறைவேற்று அலுவலர் பதவியிலிருந்து முன்னரே அகற்றப்பட்டிருந்தால்;

(ஏ) கிரிக்கெட் விளையாட்டு தொடர்பிலான ஏதேனும் பதவியைக் கொண்டிருப்பதற்கான தகைமையின்மை தொடர்பில் ஐசிசி இனுடைய விதிகளுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஒழுங்குவிதியின் பயனைக்கொண்டு பதவியைக் வகிப்பதினின்றும் தகைமையற்றவராக இருந்தால்;

(ஐ) நீதிமன்றமொன்றினால் அல்லது நியாய சபையொன்றால் கடுமையான துர்நடத்தை யொன்றுக்கு முன்னமே குற்றவாளியென கண்டறியப்பட்டிருந்தால் அல்லது ஒழுங்கு படுத்தல் குழுவொன்றால் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படுத்தப் பட்டிருந்தால்; அல்லது

(ஒ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி செயற் பட்டிருந்தால்,

பிரதான நிறைவேற்று அலுவலரொருவராக எவரேனும் ஆளின் நியமனம் இல்லாதொழிதல் வேண்டும்.

(3) பிரதான நிறைவேற்று அலுவலர் சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்குமமைய –

(அ) இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவல்களின் நிருவாகத்துக்கும் கொடுக்கல்வாங்கல்களுக்கு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) சபையால் அவருக்கு குறித்தளிக்கப்பட்ட இலங்கைக் கிரிக்கெட்டின் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிக்க, புரிய மற்றும் நிறைவேற்றல் வேண்டும்;

(இ) இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் வேண்டும்;

(ஈ) இலங்கைக் கிரிக்கெட்டைப் பிரதிநிதித் துவப்படுத்தும் எல்லா அணிகளும் பிரதி நிதிகளும் மற்றும் படைகளும் தொடர்பில்

இலங்கையினுள்ளே அல்லது வெளியே நடாத்தப்பட்ட எல்லா கிரிக்கெற் சுற்றுப் பயணங்களையும் சுற்றுப்போட்டிகளையும் மற்றும் சர்வதேச ஈடுபாடுகளையும் பேசித் தீர்த்தல், ஒருங்கிணைத்தல், ஏற்பாடு செய்தல் மற்றும் நிர்வகித்தல் வேண்டும்;

(உ) இலங்கைக் கிரிக்கெட் தொடர்பிலான திணைக் களங்கள், பிரிவுகள், அலகுகள் மற்றும் இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மூலம் சபையின் தீர்மானங்களையும் பணிப்புரைகளையும் கொண்டு நடாத்தவும் நடைமுறைப்படுத்தவும் பொறுப்பிக்கப்படல் வேண்டும்;

(ஊ) உறுப்பாண்மை தொடர்பிலான தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் உட்பட இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பாண்மைப் பதிவேடுகளைப் பேணுதல் அல்லது பேணுவித்தல் வேண்டும்;

(எ) இலங்கைக் கிரிக்கெட்டின் எவரேனும் உறுப்பினரால் தகைமை அல்லது ஒழுங்கு படுத்தல் தேவைப்பாடுகளின் ஏதேனும் உடனடி மீறுகை அல்லது இணங்கியொழுகாமையை சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்;

(ஏ) எண்ணிமச் சொத்துக்கள், புலமைச் சொத்து, தரவு, ஊடக உரிமை, பரிமாற்ற முடியாத பத்திரம், பாதுகாப்பு பத்திரம் மற்றும் ஏதேனும் வேறு இலத்திரனியல் அல்லது மெய்நிகர் சொத்துக்கள் உட்பட இலங்கைக் கிரிக்கெற்றுக்கு சொந்தமான அல்லது உரித்தாக்கப்பட்ட எல்லா அசையும் அசையா ஆதனம் மற்றும் எல்லா தொட்டுணரக்கூடிய மற்றும் தொட்டுணரமுடியாத சொத்துக்களின் கட்டுக்காப்பு, நிர்வாகம், முகாமை மற்றும் பாதுகாப்புக்காக பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஐ) இலங்கைக் கிரிக்கெட்டால் பெறப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட எல்லா பணங்கள் தொடர்பிலான கணக்குகளினதும் பிரிவு களினதும், ஆவணங்களினதும் மற்றும் தகவல்களினதும் மற்றும் அத்துடன் அத்தகைய

பெறுகைகள் மற்றும் செலவினங்கள் தொடர்பிலான எல்லா கருமங்களினதும் மற்றும் இலங்கைக் கிரிக்கெட்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அத்துடன் இலங்கைக் கிரிக்கெட்டின் நிதி நிலைமையின் சரியான மற்றும் நியாயமான கருத்தொன்றை முன்வைப்பதற்கு அவசியமான வேறு எல்லா நிதி அலுவல்களினதும் கொடுக்கல்வாங்கல்களினதும் உடன்படிக்கைகளினதும் மற்றும் வேறு கருமங் களினதும் முறையான பேணுகையை உறுதி செய்தல்வேண்டும்;

(ஒ) சபையின் சுயாதீன பணிப்பாளர்கள் இல்லாத விடத்து, ஏதேனும் சர்வதேச விளையாட்டுக் குழுவுடன், அரச அதிகாரசபையுடன் அல்லது ஏதேனும் வேறு ஏதேனும் நிறுவனத்துடன் ஏதேனும் சர்வதேச அமைப்பில், மாநாட்டில், கூட்டத்தில், பேச்சுவார்த்தையில் அல்லது ஏற்பாட்டில் இலங்கைக் கிரிக்கெட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்;

(ஓ) அங்கீகாரத்துக்காக சபைக்கும் பாராளு மன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படவேண்டிய இலங்கைக் கிரிக்கெட்டின் வருடாந்த அறிக்கையை தயாரித்தல் வேண்டுமென்பதுடன் வருடாந்த பொதுக் கூட்டத்தில் முன் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கை முன்வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தலும் வேண்டும்;

(ஔ) சபையால் காலத்துக்குக் காலம் குறித்தளிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகள் மற்றும் பணிகளை புரிதலும் நிறைவேற்றலும் வேண்டும்;

(4) பிரதான நிறைவேற்று அலுவலர், சபையின் அங்கீகாரத்துடன் இச்சட்டத்தால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை இலங்கைக் கிரிக்கெட்டின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அவர் அவசியமானதென கருதும் போதெல்லாம் கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய அலுவலர் அல்லது

ஊழியர் பிரதான நிறைவேற்று அலுவலரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புரைக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தலும் புரிதலும் மற்றும் நிறைவேற்றலும் வேண்டும்.

(5) பிரதான நிறைவேற்று அலுவலர் –

(அ) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழு அல்லது உப குழுவின் எல்லா பொதுக் கூட்டங்களின், சபைக் கூட்டங்களின் மற்றும் கூட்டங்களின் முறையான கூட்டலை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அதில் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு சபையின் தவிசாளரின் அதிகாரத்திற்கு பங்கமின்றி அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறாக அத்தகைய கூட்டங்களில் சமுகமளித்தலும் வேண்டும்;

(ஆ) சபையினதும் குழு அல்லது உபகுழுவின் எல்லா கூட்டங்களினதும் துல்லியமான நிகழ்ச்சிக் குறிப்பெண்கள் முறையாக பதியப்பட்டுள்ளதென்பதையும் பேணப்பட்டுள்ளதென்பதையும் மற்றும் பாதுகாக்கப்பட்டுள்ளதென்பதையும் சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் இலங்கைக் கிரிக்கெட்டின் எல்லா பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் பேணப்படுகின்றதென்பதையும் ஊறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் இலங்கைக் கிரிக்கெட்டின் இயைபான உறுப்பினர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் சபையினதும் குழுக்களினதும் அல்லது உப குழுக்களின் கூட்ட அறிவித்தல்களையும் நிகழ்ச்சி நிரல்களையும் மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புக்களையும் வழங்குகையையும் புழக்கத்திலிடுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

இணங்கியொழுகல் அலுவலர்

**39.** இலங்கை கிரிக்கெட்டானது இலங்கைக் கிரிக்கெட்டின் பணியாட்டொகுதியில் இணங்கியொழுகல் அலுவலரொருவரை கொண்டிருத்தல் வேண்டும். அவர் இலங்கைக் கிரிக்கெட்டின் சிரேட்ட முகாமைப் பதவியொன்றைத் தாங்குதல் வேண்டுமென்பதுடன் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுதலும் வேண்டும். இணங்கியொழுகல் அலுவலர், இலங்கைக் கிரிக்கெட்டின் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிலும் இச்சட்டத்தின்கீழான எல்லாச் சட்டத் தேவைப்பாடுகளுடனும் இலங்கைக் கிரிக்கெட் இணங்கியொழுகுகின்றதென்பதை சான்றுப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவலர்களும் ஊழியர்களும் போன்றோர்

**40.** (1) சபையானது இலங்கை கிரிக்கெட்டின் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு, வரவு செலவுத்திட்டம் மற்றும் ஏற்புடையற்பாலதான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் என்பவற்றுக்கமைய, இலங்கை கிரிக்கெட்டின் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றை செயற்றிறன் மிக்க முறையில் பிரயோகிப்பதற்கு, செயல்நிறைவேற்றுவதற்கு மற்றும் புரிவதற்கு அவசியமென சபை கருகின்றவாறாக நிரந்தரமாகவாயினுஞ்சரி, தற்காலிகமாகவாயினுஞ்சரி, நிரந்தரகாலமாகவாயினுஞ்சரி, ஒப்பந்தஞ்சார்ந்தாயினுஞ்சரி, பகுதிநேரமாயினுஞ்சரி, சாதாரணமாகவாயினுஞ்சரி, பருவ காலமாயினுஞ்சரி, கருத்திட்ட அடிப்படையில் ஆலோசனை அடிப்படையிலானுஞ்சரி அத்தகைய அலுவலர்கள், ஊழியர்கள், ஆலோசகர்கள், மதியுரையாளர்கள் மற்றும் வேறு ஆளணியினரை நிரந்தர தொழிலுக்கமர்த்தி தற்காலிக, தனிப்பட்ட ஒன்றிற்காக பதவிகளை மற்றும் நிரந்தகால ஆட்சேர்ப்பு உருவாக்கலாம்.

(2) சபையானது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்றவகையாக,

(அ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர் களினதும் ஆலோசனையாளர்களினதும் மதியுரைநர்களினதும் மற்றும் வேறு ஆளணி யினரதும் சேவைகளுக்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் நிர்ணயித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய அலுவலர்களதும் ஊழியர்களதும் ஆலோசனையாளர்களினதும் மதியுரைநர்களதும்

மற்றும் வேறு ஆளணியினரதும் நடத்தைக் கோவையை தயாரித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய அலுவலர்களதும் ஊழியர்களதும் ஆலோசனையாளர்களினதும் மதியுரைநர்களதும் மற்றும் வேறு ஆளணியினரதும் சம்பளங்கள், படிகள், மற்றும் நன்மைகளை குறித்துரைத்தல் வேண்டும்.

(3) சபையின் அலுவலரொருவர் அல்லது ஊழியரொருவர், இலங்கைக் கிரிக்கெட்டின் பதவிதாங்கும் எவரேனும் உறுப்பினரொருவராதலாகாது.

(4) இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவலரொருவராக அல்லது ஊழியரொருவராக, ஆலோசகராக, மதியுரைநர்களாக மற்றும் ஏனைய ஆளணியினராக, இலங்கை கிரிக்கெட்டின் எவரேனும் அலுவலர், ஊழியர், ஆலோசகர், மதியுரைநர்கள் மற்றும் வேறு ஆளணியினராக இருப்பதன் பயனைக்கொண்டு, ஆளொருவருக்கு அமையக்கூடிய ஏதேனும் சட்ட அல்லது வேறு கடப்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் தவறின் புரிகை அல்லது ஊழலின் ஏதேனும் செயலுக்கு நியாயமாக தொடர்புடையவாறான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பிலான ஏதேனும் தகவலை வெளியிட்டதற்காக அல்லது வெளிப்படுத்தியதற்காக ஒழுக்காற்று அல்லது வேறு வகையான ஏதேனும் தண்டனைக்கு ஆளாதலாகாது.

## பாகம் VII

## பொது ஏற்பாடுகள்

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் விளையாட்டுக் கள் சட்டத்தின் மீது மேலோங் குதல் வேண்டும்

**41.** (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்வரும் விளையாட்டுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் கிரிக்கெட் விளையாட்டு தொடர்பில் பயன்கொண்டிருத்தல் ஆகாது.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுக்களுக்கள் மற்றும் விளை யாட்டுக்கள் சட்டம் என்பவற்றுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்குதல் வேண்டும்.

ஆண்டறிக் கைகள்

**42.** (1) சபை ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவில் ஆறு மாதங்களினுள் இயைபான நிதியாண்டில் சட்டத்தின்கீழ் இலங்கைக் கிரிக்கெட்டினால் நிறைவேற்றப்பட்ட செயற் பாடுகளின் வருடாந்த அறிக்கையொன்றை பாராளுமன்றத்

திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கப்படல் வேண்டும்.

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்;

(ஆ) அடுத்த ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் மீதான அறிக்கையொன்று;

(இ) முற்போந்த கணக்கீட்டுக் காலப்பகுதியின் போதான இலங்கைக் கிரிக்கெட்டின் அரச அலுவல்களின் விரிவான விவரணமொன்று;

(ஈ) சபையின் எல்லா சுயாதீனப் பணிப்பாளர்களதும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களதும் இலங்கைக் கிரிக்கெட்டின் குழுக்களதும் உப குழுக்களதும் உறுப்பினர்களின் பெயர்களும் தகைமைகளும் அத்துடன் வரவின் விபரங்களும்;

(உ) இயைபான அறிக்கையிடும் காலப்பகுதியின் போது, சபை முக்கியமாக அல்லது குறிப்பாக கருதுகின்றவாறான மற்றும் வெளிப்படுத்தல்களை கட்டுறுத்துகின்றதான பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள், எடுக்கப்பட்ட முடிபுகள், கருத்தில் கொள்ளப்பட்ட கருமங்கள் மற்றும் முடிபுகளை நடைமுறைப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, சபை, அத்தகைய குழு மற்றும் உப குழுக்களிலிருந்து சபை, அத்தகைய குழு மற்றும் உபகுழுவின்மீது அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளினுள் வருகின்ற கருமங்கள் மீதான அறிக்கைகள்;

(ஊ) கணக்கீட்டுக் காலப்பகுதியின்போதான சபையின் சுயாதீனப் பணிப்பாளர்களதும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களதும் மற்றும் இலங்கைக் கிரிக்கெட்டின் குழுக்களதும் உப குழுக்களதும் எல்லா உறுப்பினர்களதும் ஊதியம் மற்றும் எல்லா நன்மைகளினதும் விபரங்கள்; அத்துடன்

(எ) கணக்கீட்டுக் காலப்பகுதியின்போது இலங்கை கிரிக்கெட்டுக்குச் செய்யப்பட்டவையும் இலங்கை

கிரிக்கெட்டினால் செய்யப்பட்டவையுமான நன்கொடைகளின் மொத்தத்தொகை.

(2) சபையினால் அங்கீகரிக்கப்பட்டதான ஆண்டறிக்கையானது இலங்கைக் கிரிக்கெட்டின் வலைத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

சபையினதும் குழுவினதும் உப குழுவினதும் உறுப்பினர்களின் காப்புறுதி நன்மைகள்

**43.** அத்தகைய ஆள் –

(அ) நேர்மையாகவும் நல்லெண்ணத்துடனும் செயற்பட்டுள்ளபோது;

(ஆ) இலங்கைக் கிரிக்கெட்டின் சிறந்த நலனுக்கு அவர் நியாயமானதென நம்பக்கூடியவாறு செயற்பட்டுள்ளபோது;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டங்களுக்கும் மற்றும் ஆளுகைக் கொள்கைகளுக்குமிணங்க செயற்பட்டுள்ளபோது;

(ஈ) பொருத்தமற்ற ஏதேனும் தனியாள் நன்மையைப் பெற்றில்லாதபோது,

பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது உறுப்பினர்களின் அலுவலகக் கடமைகளின் புரிகை தொடர்பில் அத்தகைய ஆட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் அத்தகைய பணிப்பாளரால், அலுவலரால் ஊழியரால் அல்லது உறுப்பினர்களால் உறப்பட்ட எல்லா உரிமைக் கோரிக்கைகள், ஆகுசெலவுகள் மற்றும் செலவுகள் இலங்கைக் கிரிக்கெட்டின் ஒவ்வொரு சுயாதீனப் பணிப்பாளர், தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர், அலுவலர் மற்றும் ஊழியர்கள், இலங்கைக் கிரிக்கெட்டின் குழுக்களினதும் உப குழுக்களினதும் உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கு சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய மட்டுப்பாட்டிற்கமைய பொருத்தமான பணிப்பாளர் மற்றும் அலுவலர் காப்புறுதிக் கொள்கையொன்றுள்ளதை இலங்கைக் கிரிக்கெட் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அமைச்சரின் மேற்பார்வை

**44.** (1) அமைச்சர், இலங்கைக் கிரிக்கெட்டின் ஆதனம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அவர் தேவைப்படுத்துகின்றதான விபரத்திரட்டுகள் கணக்குகள் மற்றும் வேறு தகவல்களைப் அத்தகைய படிவத்தில் அவருக்கு

எழுத்தில் கொடுத்துதவுவதற்கு காலத்துக்குகாலம் இலங்கை கிரிக்கெட்டை தேவைப்படுத்தலாம். அத்தகைய பணிப்புகளும் இணங்கியொழுகுதல் இலங்கை கிரிக்கெட்டுன் கடமையாதல் வேண்டும்.

(2) இலங்கைக் கிரிக்கெட்டின் நேர்மைக்கு, ஆளுகைக்கு அல்லது நிர்வாகத்துக்குப் பங்கமாக ஊழல், மோசடி, நிதி ஒழுங்கீனம் அல்லது ஏதேனும் வேறு நடத்தை தொடர்பில் அமைச்சருக்கு, நம்பத்தகு சார்த்துதல்கள் அறிவிக்கப்படுகின்றவிடத்து அல்லது நம்பத்தகு தகவல்கள் பெறப்படுகின்றவிடத்து அல்லது விழிப்பூட்டப்படுகின்றவிடத்து அமைச்சர் அவசியமானதென அவர் கருதுமிடத்து எழுத்திலான பணிப்புரையினால் –

(அ) அத்தகைய பணிப்புரையில் குறித்துரைக்கப் பட்டுள்ள காலப்பகுதியொன்றினுள் அத்தகைய கருமத்துக்கும் அறிக்கைக்கும் கணக்காய் வொன்றை நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியை தேவைப்படுத்தலாம்; அல்லது

(ஆ) ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டத்துக்கிணங்க புலனாய்வுக்காகவும் அவசி யமான நடவடிக்கைக்காகவும் பொருத்தமான சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகார சபைக்கு அல்லது வேறு தகுதிவாய்ந்த அதிகாரசபைக்கு கருமத்தை ஆற்றுப்படுத்தலாம்.

(3) மூன்றாம் உட்பிரிவின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, அமைச்சருக்கு செய்யப்பட்ட முறைப்பாடொன்றின்மீது, நம்பத்தகு தகவல் பெறப்பட்டதன்மேல் அல்லது நம்பத்தகு தகவல் வேறுவழியாக அவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதன்மேல் கிரிக்கெட் விளையாட்டின் நேர்மையைப் பாதிக்கின்ற அல்லது தொடர்பான ஏதேனும் கருமம், ஊழல், தவறான நிதி நிர்வாக அல்லது ஒழுங்கீனம், நம்பகக் கடமைகளின் கடுமையான மீறுகை, முறைகேடு அல்லது இலங்கைக் கிரிக்கெட்டின் முறையான ஆளுகைக்கு, நிர்வாகத்துக்கு அல்லது நிதி முகாமைக்கு பங்கமான இலங்கைக் கிரிக்கெட் சபையில் அல்லது சபையின் ஏதேனும் சுயாதீனப் பணிப்பாளரின் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரின் ஏதேனும் வேறு நடத்தை அங்கு இருக்கின்றதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை கொண்டிருக்குமிடத்து

சூழ்நிலைகளில் அவசியமென அமைச்சர் கருதினால் அமைச்சரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய கருமத்திற்கு பூர்வாங்கப் புலனாய்வொன்றை நடாத்துவதற்கும் அமைச்சருக்கு அறிக்கையிடுவதற்கும் அவசியமானதென அமைச்சர் கருதக்கூடியவாறான அத்தகைய தகுதியும், தகைமையும் மற்றும் அனுபவத்தையும் கொண்டுள்ள மூன்று உறுப்பினர்களினாலான அடிப்படைக் குழுவொன்றினை அமைச்சரானவர் நியமிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை கவனத்துட்கொண்டதன்மேல் அல்லது முறையான விசாரணையொன்று அவசியமென்ற கருத்தில் அமைச்சர் இருக்குமிடத்து, அமைச்சரால் குறித்துரைக்கப்பட்ட கருமங்களை விசாரணை செய்வதற்கு இலங்கை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியொருவரை அமைச்சர் நியமிக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதியின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன்மேல் சபையுடன் தொடர்புடைய சபையின் சுயாதீனப் பணிப்பாளரின் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரின் பதவி அகற்றல், இடை நிறுத்தல் அல்லது பணிகளைத் தடைசெய்தல் தொடர்பில் அதன்கண் உள்ளடக்கப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு, கண்டுபிடிப்புகளுக்கு அல்லது தீர்மானங்களுக்கிணங்க அல்லது பின்பற்றி அமைச்சர் அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாமென்பதுடன் அதன்பின்னர், விடயத்திற்கேற்ப சட்டத்திற்கிணங்க சபையின் அல்லது புதிய சபையின் புதிய சுயாதீனப் பணிப்பாளரை அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரை தேர்ந்தெடுப்பதற்காக அல்லது நியமிப்பதற்காக அவசியமான படிகளை எடுக்கலாம்.

(6) எல்லா புத்தகங்களையும், கணக்குகளையும், பதிவுகளையும், ஆவணங்களையும், இலத்திரனியல் தரவுகளையும், தகவல்களையும் மற்றும் விளக்கங்களை கொடுத்துதவுவதன்மூலமும் அத்துடன் நியாயமாக தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக அதன் வளாகத்திற்கு அத்தகைய அணுக்கத்தை, வசதிகளை மற்றும் ஆளணியினரை வழங்குவதன்மூலமும் இப்பிரிவின்கீழான ஏதேனும் கணக்காய்வு, புலனாய்வு அல்லது விசாரணை

நோக்கங்களுக்காக இலங்கை கிரிக்கெட்டின் அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் முழுமையானதும் உடனடியானதுமான ஒத்துழைப்பு வழங்குதலை இலங்கைக் கிரிக்கெட்டானது உறுதிசெய்தல் வேண்டும்.

**45.** (1) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும், சபையின் பொதுக் கூட்டத்தில் விதிகளை ஆக்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விதிகள் நான்கு சுயாதீன பணிப்பாளர்கள் மற்றும் தவிசாளர் உள்ளடங்கலாக முன்மொழியப்பட்ட விதிக்கு ஆதரவாக வாக்களிக்கும் பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையிலிருந்து மூன்றில் இரண்டு பங்கினருக்கு குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை மூலம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். விதிகள்

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையால் ஆக்கப்பட்ட விதிகள், அவ்வப்போது, அதேபோன்ற கூட்டமொன்றில் மற்றும் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அல்லது வேறுபடுத்தப்படலாம்:

ஆயின், 35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலுள்ள சபையால் ஆக்கப்பட்ட விதிகள் 35 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறைக்கமைய, திருத்தப்படுதல், மாற்றப்படுதல் அல்லது வேறுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) சபையினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் இலங்கை கிரிக்கெட்டின் வலைத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் 27 ஆம் பிரிவின்கீழ் இலங்கை கிரிக்கெட்டின் உத்தியோகபூர்வ நிறங்கள் மற்றும் மகுடங்கள் என்பன தொடர்பில் ஆக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அதன் வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அதன் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின்முன் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய விதி

அதன்கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) விதியொன்று இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப் பட்டதான தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**46.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

"ஆசியக் கிரிக்கெட் பேரவை" என்பது, ஆசியாவில் கிரிக்கெட்டுக்கான பிராந்திய ஆளும் குழு என்று பொருளாகும் என்பதுடன் அதற்கான ஏதேனும் அடுத்துறும் குழுவையும் உள்ளடக்கும்;

"கட்டமைத்தல் தொழிற்பாடு – ஒப்டைப்பு ஏற்பாடுகள்" என்பது, இலங்கை கிரிக்கெட்டின் குறிக்கோள்களை அடை வதற்கு நேரடியாகத் தொடர்புடைய ஒரு வசதி, உட்கட்டமைப்பு அல்லது ஏனைய சொத்தை விருத்திசெய்தல் அல்லது நிறுவுதல் தொடர்பான ஓர் ஒழுங்கேற்பாடு ஆகும். அதன் கீழ் அத்தகைய வசதி, உட்கட்டமைப்பு அல்லது பிறசொத்திற்கு நிதியளிப்பதற்கு, வடிவமைப்பதற்கு, கட்டமைப்பதற்கு மேம்படுத்த அல்லது தொழிற்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர் அல்லது நிறுவனமொன்று உடன்பட்ட காலப்பகுதிக்கு பின்னர், அதே வசதி, உட்கட்டமைப்பு அல்லது ஏனைய சொத்து இலங்கை கிரிக்கெட்டுக்கு ஒப்படைக்கப்படும் அல்லது ஏற்பாட்டின் விதிமுறைகளுக்கு இணங்க வேறுவிதமாகக்கையாளப்படும்.

"கூட்டுசமூகப் பொறுப்புடைமை" என்பது, இலங்கை கிரிக்கெட்டுன் மேம்

பாட்டையும் அணுகலையும் ஊக்குவிப்பதற்கும், இலங்கை முழுவதிலும் உள்ள சமுதாயங்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிப்பதையும் நோக்காகக்கொண்ட முன்னெடுப்புக்களையும் உள்ளடக்கியதாக இலங்கை கிரிக்கெட்டின் நோக்கங்களுடன் தொடர்புடைய, அவற்றுடன் இணைந்த அல்லது இலங்கை கிரிக்கெட்டின் நோக்கங்களுக்கு ஆதரவாக சமூக பொறுப்புடைமை, அறக்கொடை, கல்வி பண்பாடு சுற்றுச்சூழல், சமத்துவம், உள்ளடக்கல், பன்முகத்தன்மை, இளைஞர் மேம்பாடு மற்றும் சமுக நல முன்னெடுப்புக்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளல், ஆதரித்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகும்.

“மாவட்டக் கிரிக்கெட் கழகம்” என்பது, இலங்கையின் அந்தந்த மாவட்டத்தினுள் கிரிக்கெட்டின் நிருவாகம், ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்திக்காகத் தாபிக்கப்பட்ட முறையாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கிரிக்கெட் கழகமொன்று என்று பொருளாகும்;

“பொதுக் கூட்டம்” என்பது, இச்சட்டத்துக்கிணங்க முறையாகக் கூட்டப்பட்ட இலங்கைக் கிரிக்கெட்டின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அல்லது விசேட பொதுக் கூட்டம் என்று பொருளாகும்;

“ஆளுநர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப்போட்டி” என்பது, சுற்றுப்போட்டியின் கட்டமைப்புக்கு இணங்க இலங்கைக் கிரிக்கெட்டினால் கட்டமைக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு, நடாத்தப்பட்ட அப்பெயரைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி என்று பொருளாகும்;

“புலமைச்சொத்து உரிமைகள்” என்பது, பதிவு செய்யப்பட்டவையாயினுஞ்சரி அல்லது பதிவு செய்யப்படாதவையா

யினுஞ்சரி, இலங்கைச் சட்டங்களின்கீழ் அல்லது வேறேதேனும் நியாயாதிக்கத்தின் கீழ் உள்ள வியாபாரச் சின்னங்கள், சேவைச் சின்னங்கள், வியாபாரப் பெயர்கள், இலச்சினைகள், மகுடங்கள், பதிப்புரிமை, ஒலிப்பரப்புரிமைகள், எண்ணிம உரிமைகள், படவுரு உரிமைகள், ஊடக உரிமைகள், ஆக்கவுரிமைகள், வடிவமைப்புக்கள், ஆள்கலப்பெயர்கள், தரவுரிமைகள் மற்றும் வேறெல்லா உரிமையாண்மை உரிமைகள் என்பன உள்ளடங்கலாக, எத்தகைய தன்மையினதுமான எல்லாப் புலமைச்சொத்து உரிமைகளும் என்று பொருளாகும்;

“சர்வதேச கிரிக்கெட் பேரவை” என்பது, கிரிக்கெட்டுக்கான சர்வதேச ஆளும் குழு என்று பொருளாகும் என்பதுடன் அதற்கான ஏதேனும் அடுத்துறும் குழுவையும் உள்ளடக்கும்;

“சர்வதேச கிரிக்கெட்போட்டி” என்பது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்போட்டி, ரி 20 சர்வதேச கிரிக்கெட்போட்டி மற்றும் சர்வதேச கிரிக்கெட்போட்டி அணி ஒன்று எனப்பொருள்படும்;

“கிரிக்கெட் சட்டங்கள்” என்பது, மேரிலெபோன் கிரிக்கெட் கழகத்தினால் (எம்சீசீ) காலத்துக்குக்காலம் வெளியிடப்பட்டு திருத்தப்பட்டவாறானவையும் சர்வதேசக் கிரிக்கெட்டுக்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாறானவையும் அல்லது திரிபுபடுத்தப் பட்டவாறானவையுமான கிரிக்கெட் சட்டங்கள் என்று பொருளாகும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் விளையாட்டுக்கள் என்ற விடயம் எந்த

அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய தேசிய விளையாட்டு சங்கம்" என்பது, இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், கிரிக்கெட் விளையாட்டுக்காக, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவின்நியதிகளின்படிபதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் சங்கம் என்று பொருளாகும்;

"தேசிய குழாம்" என்பது, அடையாளங்காணப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட, ஒப்பந்தமிடப்பட்ட அல்லது தேசிய பயிற்சி நிகழ்ச்சிகள், முகாம்கள், மதிப்பீடுகள் அல்லது சபையால் நடாத்தப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு முந்தயார்படுத்தற் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்ற விளையாட்டு வீரர்கள் உட்பட, ஏதேனும் தேசிய குழுவிற்குத் தெரிவுசெய்யப்படுவதற்கென கவனத்துட் கொள்ளப்படுவதற்கான தகுதியைக் கொண்டிருப்பதாகச் சபையினால் வேறுவகையாகக் குறித்தளிக்கப் பட்ட விளையாட்டு வீரர் குழு என்று பொருளாகும்;

"தேசிய அணி" என்பது, ஐசிசி இனால், ஐசிசி உறுப்பினரொருவரால் அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கிரிக்கெட் குழுவினால் நடாத்தப்பட்டதாயினுஞ்சரி அல்லது வலுவளிக்கப்பட்டதாயினுஞ்சரி ஏதேனும் சர்வதேச போட்டி தொடர்பில், சுற்றுப்போட்டியில், போட்டிப் பந்தயத்தில் அல்லது வேறு கிரிக்கெட் நிகழ்விகளில் இலங்கையைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பெயர்குறித்தளிக்கப்பட்ட அல்லது சபையினால் வேறுவகையில் குறித்தளிக்கப்பட்ட அல்லது சபையினால் வேறுவகையில் குறித்தளிக்கப்பட்ட

விளையாட்டு வீரர் குழு என்று பொருள்படும் என்பதுடன் தேசிய அணிகள் குழாம், தேசிய பெண்கள் குழாம் மற்றும் தேசிய பிரதிநிதி குழாம் அல்லது வகுதி;

"பதவிதாங்குநர்" என்பது, தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், உதவிப் பொருளாளர் அல்லது இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினரொருவரின் அதிகாரத்தை அல்லது பொறுப்புடைமையைக் கொண்ட ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு பதவியை வகிக்கின்ற வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட பதவிதாங்குநர் அல்லது உறுப்பினர் என்று பொருளாகும்;

"மாகாண கிரிக்கெட் கழகம்" என்பது, இலங்கையின் அந்தந்த மாகாணங்களினுள் கிரிக்கெட்டின் நிருவாகம், ஊக்குவிப்பு, ஒழுங்குபடுத்துகை மற்றும் அபிவிருத்திக்காகத் தாபிக்கப்பட்ட முறையாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட மாகாண கிரிக்கெட் கழகம் என்று பொருளாகும்;

"பருவகாலம்" என்பது, சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இலங்கைக் கிரிக்கெட்டினால் தீர்மானிக் கப்பட்ட அத்தகைய தேதியன்று தொடங்குகின்றதும், இயைபான காலப்பகுதிக்காகச் சுற்றுப்போட்டி கட்டமைப்பின்கீழ் அட்டவணைப் படுத்தப்பட்ட எல்லாச் சுற்றுப் போட்டிகளும் பூர்த்திசெய்யப்பட்டு முடிவுறுவதன்மேல் முடிகின்றதுமான காலப்பகுதி என்று பொருளாகும்;

"விசேட பொதுக் கூட்டம்" என்பது, இச்சட்டத்துக்கிணங்கக் கூட்டப்பட்டதும், வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்ந்த துமான இலங்கைக் கிரிக்கெட்டின்

ஏதேனும் பொதுக் கூட்டம் என்று பொருளாகும்;

“விளையாட்டு நகர கருத்தேற்பு” என்பது, விளையாட்டுடன் மத்தியில் சூழவுள்ள பல்லின இடைதொடர்பிலான வசதிகள் மற்றும் வர்த்தக, கல்விசார், வதிவிட, புத்தாக்க மற்றும் சுற்றுலாவுடன் தொடர்புபட்ட கூறுகள் என்வற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த விளையாட்டு இடமொன்றின் அபிவிருத்தி என்பதனை உள்ளடக்குதல் வேண்டும். கிரிக்கெட்டுக்காக, இது பிரதான கிரிக்கெட் மைதானம் அல்லது பயிற்சி மற்றும் உயர்செயல்நிறைவேற்ற வசதிகளுடன் சேர்ந்த விளையாட்டு மைதானம், கல்விச்சாலைகள், விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் மருத்துவ நிலையங்கள், விளையாட்டு வீரர் தங்குமிடம், விளையாட்டு கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகள், விளையாட்டுப் பொருட்கள் விற்பனை மற்றும் விருந்தோம்பல், விளையாட்டு சுற்றுலா வசதிகள், அலுவலகங்கள் மற்றும் வர்த்தக இடங்கள், பொது புத்துணர்வாக்க இடப்பரப்புகள் மற்றும் ஆதரவளிக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

“விளையாட்டுக்கள் சட்டம்” என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் என்று பொருளாகும்; அத்துடன்

“இலங்கை கிரிக்கெட் மாற்றுக்குழு” என்பது, கிரிக்கெட் விளையாட்டுக்களுடன் தொடர்பிலான தேசிய விளையாட்டுச் சங்கத்தின் பணிகளை தொடர்வதற்கான இடைக்கால ஒழுங்கேற்பாடொன்றாக

விளையாட்டுக்கள் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.

## பாகம் VIII

### நிலைபெயர்கால ஏற்பாடுகள்

நிலை பெயர்கால ஏற்பாடுகள்

**47.** (1) முன்னுரித்தாளர் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக நடைமுறையில் இல்லா தொழிதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் –

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள முன்னுரித்தாளர் குழுவின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக் களும் இலங்கைக் கிரிக்கெட்டின் சொத்துக் களாகவும் பொறுப்புக்களாகவும் இருப்பவை யாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ளவையும் முன்னுரித்தாளர் குழுவுடன் செய்து கொள்ளப் பட்டவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அல்லது அதனால் கையொப்பமிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஆவணமும், இலங்கைக் கிரிக்கெட்டுடன் செய்துக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் இருப்பவையாகவும் அதனால் கையொப்ப மிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஆவணங் களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(இ) முன்னுரித்தாளர் குழுவினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவை யுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் அல்லது குற்றவழக்குகளும், இலங்கைக் கிரிக்கெட்டினால் அல்லது

அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு களாகவும், வழக்கு நடவடிக்கைகளாகவும் அல்லது குற்றவழக்குகளாகவும் இருப்பவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற் கிணங்கத் தொடரவும்படலாம்;

(ஈ) முன்னுரித்தாளர் குழுவினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் செய்து கொள்ளப் பட்டவையும் அல்லது செய்யப்பட்டவையும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று திருப்திப்படா துள்ளவையுமான எல்லாத் தீர்வைகளும், அளிப்புக்களும், விடயத்துக்கேற்ப, இலங்கைக் கிரிக்கெட்டுக்காக அல்லது அதற்கெதிராகச் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்வைகளாக அல்லது அளிப்புக்களாக இருப்பவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம்;

(உ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ளவையும் முன்னுரித்தாளர் குழுவின் அத்தகைய ஆதனத்திலிருந்து அல்லது தொழிலிலிருந்து எழுகின்றவையுமான எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும், இலங்கைக் கிரிக்கெட்டின் அத்தகைய ஆதனத்திலிருந்து அல்லது தொழிலிலிருந்து எழுகின்ற உரிமைகளாகவும், தத்துவங்களாகவும், சிறப்புரிமைகளாகவும், அக்கறைகளாகவும் இருப்பவையாகக் கருதப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் முன்னுரித்தாளர் குழுவினால் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று சேவையாற்றுகின்றவர்களுமான பணியாட்டொகுதியின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் வேறு ஆட்களும், இச்சட்டம்

நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அவர்களுக்கு ஏற்புடையனவாகவிருந்த நியதிநிபந்தனைகளைப் பார்க்கிலும் குறைந்த அனுகூலமுடையவையாக இல்லாத அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது இலங்கைக் கிரிக்கெட்டினால் தொழிலுக்கு அமர்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(எ) இச்சட்டத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று –

(i) நிறைவேற்றுகையை அல்லது அங்கீகாரத்தை எதிர்பார்த்துக்கொண்டு முன்னமைந்தவர் குழுவினால் சட்டமுறையாகச் செய்யப்பட்ட எல்லா நியமனங்களும், பெயர்குறித்த நியமனங்களும், அதிகாரவளிப்புக்களும் மற்றும் முடிவுறாதுள்ள நிறைவேற்றுகை அல்லது அதிகாரம்;

(ii) கையுதிர்ப்பை எதிர்பார்த்துக்கொண்டு முன்னுரித்தாளர் குழுவின் எல்லா ஒழுக்காற்று நடவடிக்கைகளும், புலனாய்வு களும், ஒழுக்காற்று மேன் முறையீடுகளும் மற்றும் நிருவாக அல்லது ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளும்;

(iii) பூர்த்திசெய்யப்படுதலை எதிர்பார்க்கும் எல்லாச் சுற்றுப்போட்டிகளும் போட்டி களும்,

அத்தகைய நிறைவேற்றுகை, அங்கீகாரம், கையுதிர்ப்பு அல்லது பூர்த்திசெய்கை இச்சட்டத்தின் ஒவ்வாதவையாக இல்லா தளவுக்கு, நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த தொடர்ந்து நிறைவேற்றப்படுதலும்,

அங்கீகரிக்கப்படுதலும், கையுதிர்க்கப்படுதலும் அல்லது பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டும்.

(3) நடப்பு பதவியிலுள்ள சபை இலங்கை கிரிக்கெட்டின் எல்லாத் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன் 9 ஆம் பிரிவின் (5) ஆம் உட் பிரிவுக்கிணங்க, முதலாவது சபையின் பதவிக்காலம் தொடங்கும் வரை, கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய அலுவல்களை ஆளுவதற்கு, முகாமை செய்வதற்கு மற்றும் நிருவகிப்பதற்கான எல்லாத் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) நடப்பு பதவியிலுள்ள சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்குப் பின்னர் நடாத்தப்பட்ட அதன் கூட்டங்களில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி இலங்கைக் கிரிக்கெட்டின் முதலாவது சபை நியமிக்கப்படும்வரை, இலங்கைக் கிரிக்கெட்டின் அலுவல்களினதும் பணிகளினதும் தகுந்த ஆளுகை, நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துகைக்காக அவசியமாகக்கூடியவாறாக, பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) உத்தியோகப்பூர்வ நிறங்களும் மகுடங்களும்;

(ஆ) நடப்பு பதவியிலுள்ள சபையினது உறுப்பினர் களின் கூட்டங்கள்;

(இ) இலங்கை கிரிக்கெட்டின் விளையாட்டு சுற்றுக் கட்டமைப்பு;

(ஈ) வருடாந்தப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல் மற்றும் ஆண்டிறுதி பொதுக் கூட்டத்தின் நடத்தை மற்றும் அதனுள் தொடர்புபட்ட கருமங்கள்;

(உ) வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் முதலாவது சபையின் ஏழு தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களின் தேர்தலுக்கான தெரிவுச் செயன்முறை;

(ஊ) உள்நாட்டுக் கிரிக்கெட் ஆளுகையும், நிருவாகமும், சுற்றுப்போட்டி மேற்பார்வையும்;

(எ) ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள்;

(ஏ) பிணக்குத் தீர்ப்பு நடவடிக்கைமுறைகள்;

(ஐ) ஆண்கள் மற்றும் பெண்களின் தெரிவுக் குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கைமுறை;

(ஒ) மாவட்டக் கிரிக்கெட் கழகங்கள் மற்றும் மாகாண கிரிக்கெட் கழகங்கள் தொடர்பான கருமங்கள்;

(ஓ) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் உபகுழுக்கள் தொடர்பான நியதிகள் மற்றும் தொடர்பு குறிகள்;

(ஔ) பெயர்குறித்த நியமன குழுவின் எடுத்துக் காட்டுதல் மற்றும் சுயதீன பணிப்பாளர்கள் தெரிவு தொடர்பில் அதனுடன் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை;

(க) இலங்கை கிரிக்கெட்டின் உறுப்பினர்களின் பதிவு பற்றிய செயல்முறை;

(ங) பொதுக் கூட்டங்கள் தொடர்பான கூட்டுதல் மற்றும் நடாத்துகை மற்றும் ஏனைய துணைநிலை கருமம்; அத்துடன்

(ச) இலங்கை கிரிக்கெட்டின் அலுவல்கள் பற்றிய முறையான ஆளுகை மற்றும் நிருவாகம் என்பவற்றுக்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**48.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**(பிரிவுகள் 2, 4 மற்றும் 29 )**

## அட்டவணை

## இலங்கைக் கிரிக்கெட்டின் உறுப்பினர்களது வகுதிகள், தகவுடைமைக் கட்டளைக்கற்கள் மற்றும் நியதிகளும் நிபந்தனைகளும்

| *நிரல் I* **இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II* **தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III* **நியதிநிபந்தனைகள்** |
|---|---|---|
| (1) தர வரிசை 'அ' உறுப் பினர் | (அ) கழகமானது கவனத்துட் கொள்ளப்படும் இயைபான காலத்துக்கு முன்னர் கடைசியாகப் பூர்த்தி செய்யப்பட்ட பருவகாலத்தின் முடிவில், 35 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுப் போட்டிக் கட்டமைப்புக்கு இணங்க இலங்கைக் கிரிக்கெட்டினால் கட்டமைக்கப் பட்ட, ஒழுங்கமைக் கப்பட்ட மற்றும் நடாத்தப்பட்ட தரவரிசை 'அ' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்குத் தகைமை பெறுகின்ற விடத்து, அத்தகைய கழகம், இலங்கைக் கிரிக்கெட்டின் தரவரிசை 'அ' உறுப்பினராகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும். | எவரேனும் தரவரிசை 'அ' உறுப்பினர் –<br><br>(அ) இலங்கைக் கிரிக்கெட்டினுள் உறுப்பாண்மையின் தலைமைத்துவ வகுதியை அமைத்துருவாக்குதல் வேண்டும்;<br><br>(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கியொழுகு வதற்கு அமைந்தவராக இருத்தல் வேண்டும்;<br><br>(இ) இலங்கைக் கிரிக்கெட்டின் ஏதேனும் பொதுக் கூட்டத் தில் இரண்டு வாக்குகளைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;<br><br>(ஈ) கவனத்துட்கொள்ளப்படும் இயைபான நேரத்தில் தரவரிசை 'அ' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுநர் ஒருவராக இருத்தல் வேண்டும்; |

| *நிரல் I*<br>**இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II*<br>**தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III*<br>**நியதிநிபந்தனைகள்** |
|---|---|---|
| | *எடுத்துக்காட்டு*<br><br>கொடுக்கப்பட்ட வோர் ஆண்டில் கவனத்துட் கொள்ளப்படுவதற்கான இயைபான தேதி யூன் 1 ஆகும். அத்தேதிக்கு முன்னர் தரவரிசை ‘ஆ’ சுற்றுப் போட்டியில் போட்டியிட்ட கழகம், அடுத்த பருவ காலத்துக்குத் தரவரிசை ‘அ’ வுக்கு உயர்த்தப் படுவதற்குச் சுற்றுப் போட்டியின் முடிவில் உரித்துடையதாக இருந்தது. எவ்வாறாயினும் தரவரிசை ‘அ’ சுற்றுப்போட்டி இன்னமும் பூர்த்தி செய்யப் படவுள்ளதுடன் தரவரிசை ‘அ’ விலிருந்து தரவரிசை ‘ஆ’ வுக்குப் பதவி குறைக்கப் படவுள்ள அணி இன்னமும் தீர்மானிக்கப் படவுள்ளது. முன்னைய பருவகாலம் இன்னமும் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக இருப்பதனால் கழகம் X ஆனது தரவரிசை ‘ஆ’ வின்கீழ் கவனத்துட் கொள்ளப்பட வேண்டிய தாகவுள்ளது. | (உ) இலங்கைக் கிரிக்கெட்டி னால் கட்டமைக்கப்படும், ஒழுங்கமைக்கப்படும், நடாத்தப்படும் மற்றும் வலுவளிக்கப்படும் தர வரிசை ‘அ’ கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுதல் வேண்டும்;<br><br>(ஊ) விதித்துரைக்கப்படக் கூடிய வாறு ஆளுகை, கணக்கீடு, நிருவாகம் மற்றும் கிரிக் கெட் தொழிற்பாடுகள் பற்றி தகுந்த நியமங்களைப் பேணுதல் வேண்டும்;<br><br>(எ) எல்லா நேரங்களிலும் இருநூறு உறுப்பினர்களைக் கொண்டவொரு குறைந்த பட்ச பதிவு செய்யப்பட்ட உறுப்பாண்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இலங்கைக் கிரிக்கெட்டினால் நடாத்தப் பட்ட ஏதேனும் பரிசீலனை அல்லது சரிபார்த்தலின் மேல் இத்தேவைப்பாட்டுக் கான இணங்கியொழுகு தலை எடுத்துக்காட்டுதலும் வேண்டும்:<br><br>ஆயின், எவரேனும் தர வரிசை ‘அ’ உறுப்பினர் அத்தகைய குறைந்தபட்ச உறுப்பாண்மைத் தேவைப் பாட்டைப் பேணத் தவறு மிடத்து, அத்தகைய உறுப் பினர், அத்தகைய தேவைப் பாடு நிறைவேற்றப்படும் வரை ஒரு வாக்குக்கு மட்டுமே உரித்துடைய வராதல் வேண்டும்; |

| *நிரல் I*<br>**இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II*<br>**தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III*<br>**நியதிநிபந்தனைகள்** |
| --- | --- | --- |
| | (ஆ) எவரேனும் உறுப்பினர் தரவரசை ‘ஆ’ கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலிருந்து தரவரிசை ‘அ’ கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்குப் பதவியுயர்த்தப் படுமிடத்து, அத்தகைய உறுப்பினர், தரவரிசை ‘அ’ கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு எந்தப் பருவ காலத்தில் உரித்துடை யவராக வருகின்றாரோ அந்தப் பருவகாலத்தை உடனடியாக அடுத்துறும் ஆண்டிலிருந்து மட்டுமே, அதற்கு ஏற்புடையற்பாலனவான வாக்களிக்கும் உரிமைகளுடன் சேர்த்து, தரவரிசை’அ’ உறுப்பின ரொருவராக ஏற்றங்கீகரிக்கப் படுவதற்கு உரித்துடையவராக வருதல் வேண்டும்:<br><br>ஆயின், இயைபான பருவக்காலத்துக்கான தரவரிசை ‘அ’ சுற்றுப்போட்டி பூர்த்தி செய்யப் பட்டிருத்தலும், இதன்கண் நிரல் III இன் பந்தி (ஊ) இல் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச உறுப்பாண்மைக் கட்டளைக்கற்களுக்கு இணங்கியொழுக எப்போதும் அமைய விருத்தலும் வேண்டும். | (ஏ) கொடுக்கப்பட்ட ஏதேனும் ஆண்டின் போது தர வரிசை ‘அ’ கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு அத்தகைய உறுப்பினர் உரித்துடைய வராக இல்லாதொழியும் பட்சத்தில் அதன் தரவரிசை ’அ’ உறுப்பினர் அந்தஸ்தை எந்நேரத்திலும் இழப்பதற்கு ஆளாதல் வேண்டும். |

| *நிரல் I*<br>**இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II*<br>**தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III*<br>**நியதிநிபந்தனைகள்** |
|---|---|---|
| (2) தரவரிசை 'ஆ' உறுப்பினர் | அ) கவனத்துட் கொள்ளப்படும் இயைபான காலத்துக்கு முன்னர் கடைசியாகப் பூர்த்தி செய்யப்பட்ட பருவகாலத்தின் முடிவில், 35 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுப் போட்டிக் கட்டமைப்புக்கு இணங்க இலங்கைக் கிரிக்கெட்டினால் கட்டமைக்கப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் நடாத்தப்பட்ட தரவரிசை 'ஆ' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்குக் கழகம் தகைமை பெறுகின்ற விடத்து, அத்தகைய கழகம், இலங்கைக் கிரிக்கெட்டின் தரவரிசை 'ஆ' உறுப்பினர் ஒருவராகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்<br><br>(ஆ) ஆளுநர் வெற்றிக் கிண்ணச் சுற்றுப் போட்டி யிலிருந்து தரவரிசை 'ஆ' கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்குப் பதவியுயர்த்தப் பட்ட எவரேனும் உறுப்பினர், தரவரிசை 'ஆ' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு அத்தகைய உறுப்பினர் எந்தப் பருவகாலத்தில் உரித்துடையவராக வருகின்றாரோ அந்தப் பருவகாலத்தை உடனடியாக அடுத்துறும் ஆண்டிலிருந்து மட்டுமே, அதற்கு ஏற்புடையற் பாலனவான வாக்களிக்கும் உரிமைகளுடன் சேர்த்து, தரவரிசை'ஆ' உறுப்பின ரொருவராக ஏற்றங்கீகரிக் கப்படுவதற்கு உரித்துடையவராக வருதல் வேண்டும். | எவரேனும் தரவரிசை 'ஆ' உறுப்பினர் –<br><br>(அ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கியொழுகு வதற்கமைய, ஏதேனும் பொதுக் கூட்டத்தில ஒரு வாக்குக்கு உரித்துடை யவராதல் வேண்டும்;<br><br>(ஆ) இலங்கைக் கிரிக்கெட்டி னால் கட்டமைக்கப்பட்ட, ஒழுங்கமைக் கப்பட்ட மற்றும் நடாத்தப்பட்ட தரவரிசை 'ஆ' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுதல் வேண்டும்;<br><br>(இ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கியொழுகு தல் வேண்டும்;<br><br>(ஈ) விதித்துரைக்கப் படக் கூடியவாறான ஆளுகை, கணக்கீடு, நிருவாகம் மற்றும் கிரிக்கெட் தொழிற் பாடுகள் பற்றி தகுந்த நியமங்களைப் பேணுதல் வேண்டும்;<br><br>(உ) எல்லா நேரங்களிலும் நூறு உறுப்பினர்களைக் கொண்ட குறைந்தபட்ச பதிவு செய்யப்பட்ட உறுப்பாண்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இலங்கைக் கிரிக்கெட்டினால் நடாத்தப் பட்ட ஏதேனும் பரிசீலனை அல்லது சரிபார்த்தலின் மேல் இத்தேவைப்பாட்டுக் கான இணங்கியொழுகு தலை எடுத்துக் காட்டுதலும் வேண்டும்; |

| *நிரல் I* இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள் | *நிரல் II* தகவுடைமைக் கட்டளைக்கற்கள் | *நிரல் III* நியதிநிபந்தனைகள் |
|---|---|---|
| | | (ஊ) கவனத்துட் கொள்ளப்படு தலின் கீழுள்ள இயைபான நேரத்தில், தரவரிசை ‘ஆ’ கிரிக்கெட் சுற்றுப் போட்டி யில் பங்குபற்றுநர் ஒருவராக இருத்தல் வேண்டும்; அத்துடன் |
| | | (எ) எந்நேரத்திலும், அத்தகைய உறுப்பினர், கொடுக்கப் பட்ட ஏதேனும் ஆண்டின் போது தரவரிசை ‘ஆ’ கிரிக்கெட் சுற்றுப் போட்டி யில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராக இல்லாதொழியும் பட்சத்தில் அல்லது இதன்கண் விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச உறுப் பாண்மைக் கட்டளைக் கற்களைத் திருப்திப்படுத்து வதற்குத் தவறும் பட்சத்தில், அதன் தரவரிசை ‘ஆ’ உறுப்பினர் அந்தஸ் தையும் அத்துடன்/ அல்லது வாக்களிக்கும் உரிமைகளையும் இழப் பதற்கு ஆளாதல் வேண்டும். |
| | | அத்தகைய வாக்களிக்கும் உரிமைகள் அல்லது உறுப்பாண்மை அந்தஸ்து இழக்கப்படுவதன் மேல், அத்தகைய உறுப்பினர் எந்தக் கிரிக்கெட் மட்டத்தில் பங்குபற்று கின்றாரோ அந்தக் கிரிக்கெட் மட்டத்துக்கு நேரொத்ததாகவுள்ள இயைபான உறுப் பாண்மை வகுதிக்கு மீளப் பெயர் குறிக்கப்படுதல் அத்துடன்/ அல்லது மீள வகுப்பாக்கஞ் செய்யப் படுதல் வேண்டும். |

*நிரல் I*
**இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்**

(3) தரவரிசை ‘இ’ உறுப்பினர்

*நிரல் II*
**தகவுடைமைக் கட்டளைக்கற்கள்**

(அ) கவனத்துட் கொள்ளப்படும் இயைபான காலத்துக்கு நேர்முற்போந்த கடைசியாகப் பூர்த்தி செய்யப்பட்ட பருவ காலத்தின் புள்ளிகளினதும் தரநிலைகளினதும் அடிப்படையில், 35 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்புடையற் பாலதான சுற்றுப்போட்டிக் கட்டமைப்புக்கு இணங்க இலங்கைக் கிரிக்கெட்டினால் கட்டமைக்கப்படுவதும், ஒழுங்கமைக்கப்படுவதும் நடாத்தப்படுவதுமான ஆளுநர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு கழகம் அல்லது நிறுவகம் தகைமை பெறுகின்றவிடத்து, அத்தகைய கழகம் அல்லது நிறுவகம், இலங்கைக் கிரிக்கெட்டின் தரவரிசை ‘இ’ உறுப்பினராகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மாகாணங்களுக்கு இடையேயான சுற்றுப் போட்டி யிலிருந்து ஆளுநர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப்போட்டியில் பதவியுயர்த்தப் பட்ட எவரேனும் உறுப்பினர், அத்தகைய உறுப்பினர் எப்பருவகாலத்தில் ஆளுநர் வெற்றிக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகவுடையவராக வருகின்றாரோ அப்பருவ காலத்தை உடனடியாக அடுத்துறும்

*நிரல் III*
**நியதிநிபந்தனைகள்**

எவரேனும் தரவரிசை ‘இ’ உறுப்பினர்கள் –

(அ) கண்டிப்பாக அவதானிப் பாளர்கள் என்ற தன்மை யில் மட்டுமே இலங்கைக் கிரிக்கெட்டின் பொதுக் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு அனுமதிக்கப் படுதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்கள், இலங்கைக் கிரிக்கெட்டின் ஏதேனும் பொதுக் கூட்டத் தில் வாக்களிப்பதற்கு, ஏதேனும் வாக்களிக்கும் செயன் முறையில் பங்கு பற்றுவதற்கு அல்லது ஏதேனும் முடிபாக்கலில் வேறுவகையாகச் செல் வாக்குச் செலுத்துவதற்கு அல்லது கணக்குக் கெடுக்கப் படுவதற்கு உரித்துடைய வராதலாகாது;

(ஆ) இலங்கைக் கிரிக்கெட் டினால் கட்டமைக் கப்படும், ஒழுங்கமைக் கப்படும், நடாத்தப்படும் அல்லது வலுவளிக்கப்படும் ஆளுநர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுதல் வேண்டும்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கியொழு குதல் வேண்டும்;

(ஈ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான ஆளுகை, கணக்கீடு, நிருவாகம் மற்றும் கிரிக்கெட் தொழிற் பாடுகளின் முறையான நியமங்களைப் பேணுதல் வேண்டும்;

| *நிரல் I*<br>**இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II*<br>**தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III*<br>**நியதிநிபந்தனைகள்** |
|---|---|---|
| | ஆண்டிலிருந்து மட்டுமே தரவரிசை 'இ' உறுப்பின ரொருவராக ஏற்றங்கீ கரிக்கப்படுவதற்கு உரித்துடையவராக வருதல் வேண்டும். | (உ) எல்லா நேரங்களிலும் குறைந்தபட்சம் ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட பதிவு செய்யப் பட்ட உறுப்பாண்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இலங்கைக் கிரிக்கெட்டினால் நடாத்தப் பட்ட ஏதேனும் பரிசீலனை அல்லது சரிபார்த்தலின் மேல் இத்தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதனை எடுத்துக் காட்டுதலும் வேண்டும்; அத்துடன்<br><br>(ஊ) கொடுக்கப்பட்ட ஏதேனும் ஆண்டின்போது ஆளுநர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு அத்தகைய உறுப்பினர் உரித்துடையவராக இல்லாதொழியும் பட்சத்தில், அல்லது இதன் கண் (உ) என்னும் பந்தியில் விதிக்கப்பட்ட குறைந்த பட்ச உறுப்பாண்மைக் கட்டளைக்கற்களைத் திருப்பி செய்யத்தவறும் பட்சத்தில், அதன் தரவரிசை 'இ' அந்தஸ்தை இழப்ப தற்கு எந்நேரத்திலும் ஆளாதல் வேண்டும்.<br><br>அத்தகைய உறுப்பாண்மை அந்தஸ்தை இழப்பதன் மேல், அத்தகைய உறுப்பினர், ஒரு பொது உறுப்பினராக மீளப் பெயர்குறிக்கப்படுதல் அத்துடன்/ அல்லது மீள வகுப்பாக்கஞ் செய்யப் படுதல் வேண்டும். |

| *நிரல் I* **இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II* **தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III* **நியதிநிபந்தனைகள்** |
|---|---|---|
| (4) மாகாண கிரிக்கெட் கழகம் | (அ) இலங்கையின் அந்தந்த மாகாணங்களினுள் கிரிக்கெட்டின் நிருவாகம், ஊக்குவிப்பு, ஒழுங்கமைவு மற்றும் அபிவிருத்திக்காகத் தாபிக்கப்பட்ட உரியமுறையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மாகாண கிரிக்கெட் கழகங்கள் | ஒவ்வொரு மாகாணக் கிரிக்கெட் கழகமும் -<br><br>(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியில் உள தாயிருக்கும், இலங்கையின் புவியியற்சார் பிரிவுகளின் அடிப்படையில் அத்தகைய மாகாணத்தினுள் அடங்கு கின்ற முறையான மாவட்டங்களை உட்படுத் துதல் வேண்டும்;<br><br>ஆயின், ஒவ்வொரு மாகாணத்துக்காகவும் ஒரு மாகாணக் கிரிக்கெட் கழகம் அபிவிருத்தி செய்யப்படும் வரை, மாகாணக் கிரிக்கெட் கழகமொன்று அத்தகைய மாகாணத்துக்கு வெளியேயான மாவட்டங்களை உள்ளடக்கலாம்;<br><br>(ஆ) அந்தந்த மாகாணத்திலுள்ள அந்தந்த மாவட்டக் கிரிக் கெட் கழகத்தினால் மட்டுமே அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்;<br><br>(இ) இலங்கைக் கிரிக்கெட்டி னால் பணிக்கப்படக் கூடியவாறாக அதன் மாகாணத்தினுள் கிரிக்கெட் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் வேண்டும்;<br><br>(ஈ) மாகாண மற்றும் அடிமட் டங்களில் கிரிக்கெட்டின் அபிவிருத்திக்காகவும் ஊக்குவிப்புக்காகவும் இலங்கைக் கிரிக்கெட்டின் கூட்டுழைப்புடன் பணி யாற்றுதல் வேண்டும்; |

| *நிரல் I*<br>**இலங்கைக் கிரிக் கெட்டின் உறுப்பினர் களது வகுதிகள்** | *நிரல் II*<br>**தகவுடைமைக் கட்டளைக்கற்கள்** | *நிரல் III*<br>**நியதிநிபந்தனைகள்** |
|---|---|---|
| | | (உ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கியொழு குதல் வேண்டும்;<br>(ஊ) காலத்துக்குக் காலம் இலங்கைக் கிரிக்கெட்டி னால் தேவைப்படுத்தப் படக் கூடியவறான அத்தகைய அறிக்கை களையும், கணக்குகளை யும், புள்ளிவிபரங்களையும் மற்றும் வேறு தகவல் களையும் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்<br>(எ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கியொழுகு வதற்கமைய, இலங்கைக் கிரிக்கெட்டின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் ஒரு வாக்குக்கு உரித்துடையவராதல் வேண்டும். |
| (5) பொது உறுப்பினர் | ஏதேனும் பருவகாலத்தின் முடிவில் தரவரிசை 'அ' உறுப்பினர்களின், தரவரிசை 'ஆ' உறுப்பினர்களின் அல்லது தரவரிசை 'இ' உறுப்பினர்களின் வகுதிகளினுள் அடங்காத எவரேனும் உறுப்பினர் ஒரு பொது உறுப்பினராக வகுப்பாக்கம் செய்யப்படுதல் வேண்டும். ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, மாவட்டக் கிரிக்கெட் கழகங்கள் பொது உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். | |
| (6) பெண் களின் கிரிக்கெட் கழகங்கள் | சபையினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க ஏதேனும் பெண்களின் கிரிக்கெட் கழகத்தினால் சேர்த்துக் கொள்ளப்படக் கூடியவாறான உறுப்பினர்களைக் கொண்டுள்ள அத்தகைய பெண்களின் கிரிக்கெட் கழகத்தைச் சபையானது கொண்டிருத்தல் வேண்டும். | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.